14. JAYASINGHE M V K
15. MUNASINGHE N S A
16. PRASADINI D W M E
17. PREMARATHNA A P R P
18. PREMASIRI K G H
19. RANDIKA P R Y
20. RANDIMAL A S
21. RANGIKA M A L
22. RATHNAWEERA R P S K
23. ROHITHA H G A
24. RUPASINGHE R D C S P
25. RUWANPATHIRANA A
26. SANDARUWANI A K
27. SRIKANTHA K A J
28. WIJETHUNGE R S V A K

#### BACHELOR OF TECHNOLOGY IN QUANTITY SURVEYING

1. ABEYGUNAWARDANA E A D C
2. ALAHAKOON B W
3. BANDARA A R W M B W P M
4. BANDARA W M K D
5. DARSHANI T W C
6. DASSANAYAKE D M W G E M
7. DE SOYZA M A A L
8. DHARMAWARDHNA P L C U
9. FERNANDO T C U
10. GUNASEKARA S P D I L
11. GUNATHILAKA G A S
12. HETTIARACHCHI N D G
13. HEWAGE A K M
14. JAYATHILAKA H L J S
15. JAYAVICKRAMA T D W S
16. JAYAWARDANA K A S M
17. KARUNANAYAKA K P M N
18. KARUNATHILAKA N B K S P
19. KUMARI P M G I
20. MAHAWATHTHA S W
21. NIROSHAN T M C
22. NIROSHKANTH P
23. PRASAD D G R
24. PREMARATHNA K P A M
25. PRIYARUWAN E A S
26. RODRIGO A S S
27. RUPASINGHE T C S
28. SANJEEWANI K M G D
29. SENEVIRATHNE E A J S
30. SILVA H K S
31. SILVA H W I M
32. SISILAKSHA M D N
33. THARAKA P G R
34. UDAYANGA D M D C
35. UDAYANGA P G C
36. WEERAWARDANA M D B N
37. WIJEBANDARA W M P D N

#### BACHELOR OF TECHNOLOGY IN FOOD PROCESS TECHNOLOGY

1. AFSHA M S F
2. AKALANKA K G D
3. AMARASINGHE M D V
4. ARIYARATHNA H K A C
5. ATHTHANAYAKE B M M
6. DASANAYAKA U P A L
7. DAYANANDA I R
8. DHARSHANA V
9. DILRUKSHI K D A S
10. GODEWITHARANA A S H
11. HETTIARACHCHIGE H T D
12. INDRACHAPA K R K
13. JAYARATHNA P A S
14. JAYAWEERA W H D
15. KANAKARATHNA P
16. KUMARA B W M
17. KUMARASINGHA S L T
18. KUMARI J H R U
19. LAKMINI K D C
20. LIYANAPATHIRANA U L
21. LIYANARACHCHI H L D D
22. MADUMADAVI A M U
23. MANJULA L B P
24. MEEGAHAKOTUWA M G N C B
25. NANAYAKKARA M S S A
26. NISSANKA N A S L
27. PERERA M R P
28. PRIYADARSHANA D M
29. RAIHANA M N F
30. RANASINGHE W M D M
31. RATHNAMALI G D S
32. RATHNAYAKE I A K D
33. SAFNA M N F
34. SENARATHNA J N D
35. SENAWEERA ARACHCHI D N
36. SHANIKA G A
37. SIRIWARDHANA S M L R
38. UDARA M G N
39. UMASHKANTH K
40. WICKRAMARACHCHI W A D K
41. WIJEKOON W M K D K
42. YOGAPRATHISH V

### FACULTY OF INFORMATION TECHNOLOGY

#### BACHELOR OF TECHNOLOGY IN MULTIMEDIA & WEB TECHNOLOGY

1. AHAMED J J
2. ALUTHGE A K
3. ARIYALATHA W G M R
4. CHANDRASENA J K Y L
5. DE SILVA L S P
6. DE SILVA R K G
7. DE SILVA S A N H
8. DHARMARATHNA K G M N
9. FERNANDO K P E
10. FERNANDO P U I
11. GOWITHAMY U
12. HETTIARAHCHI A D
13. HISHMA M H F
14. JAYASENA A K A P
15. JAYASINGHE H G L
16. JAYAWICKRAMA H N P
17. KAVINDA T H P
18. KISHANTHINI T
19. KISHOKUMAR G
20. KUMARI H M B L
21. PRIYADARSHANA A R A R M
22. FAHIM M F M
23. SHANTHINI N
24. WEERASEKARA W M U D

#### BACHELOR OF TECHNOLOGY IN NETWORK TECHNOLOGY

1. AMARASINGHE H T P
2. JAYAMANNA J M C P
3. JAYASURIYA J A D P P
4. KARUNATHILAKA B R D H
5. KUMARASIRI M A R P
6. MAHESH K G B
7. MARUTHI C
8. PAVITHRA B H N S S
9. PRIYANHASHANA K L A H
10. PUNYATHILAKA S G M M P
11. RAJEEV S
12. RAJEEVAN S
13. RASHMIKA V S
14. RIFKHAN M I M
15. RUMAIS M S A
16. RUPASINGHE D A S T
17. SAFZATH Z A M
18. SAMANTHA A H A
19. SUHAIL M K M
20. SUJIKARAN S
21. UPULCHANDRA W L I
22. WIJAYASENA W A S R

#### BACHELOR OF TECHNOLOGY IN SOFTWARE TECHNOLOGY

1. AMARAKOON B J
2. AMARASINGHE M S
3. BANDARA R B T I
4. CHANDRASAKARA I A E B S
5. DARSHANA A G
6. DARSHANA B P
7. DASANAYAKA A K H E
8. DESHAN R N
9. DHARINI Y H
10. DISSANAYAKA D M R S
11. GAMAGE K G K M
12. GUNASENA N P
13. HERATH S H M C
14. JAYATHUNGA C U S
15. JAYAWEERA J M L M
16. KANDAMBY W G S S
17. KOHILAPRIAN N
18. LIYANAGE N M P
19. MADHUSHANI A G G
20. MUHILAN K
21. NIROSHANI C M M N
22. PAVUCSAN M
23. PEIRIS M R M K H
24. PERERA G C L D
25. PERERA M N
26. PRIYANKA K
27. PRIYASHANTHA K M D R
28. RATHNAYAKE C R B
29. RUPASINGHA M L K
30. SENAVIRATHNE J M J V B
31. VITHTHIYAKARAN N
32. WANASINGHE W A H P
33. WEERASINGHE H S

## MEDAL AWARDEES FOR BEST ACADEMIC PERFORMANCES



**L.V. Bakelmun**
B. Tech in Building Services Technology (2017/2018/B1)



**K Rajkumar**
B. Tech in Building Services Technology (2016/2017/B2)



**L.G.D.H.C.Dissanayake**
B.Tech in Construction Technology and Resource Management (2017/2018/B1)



**G Niros**
B.Tech in Construction Technology and Resource Management (2017/2018/B1)



**P.Gajenthiran**
B.Tech in Construction Technology and Resource Management (2016/2017/B2)



**K B N Sampath**
B.Tech in Mechatronics Technology (2016/2017/B2)



**A. G. M. I. S. Wijesinghe**
B.Tech in Mechatronics Technology (2017/2018/B1)



**P. G. D. Chinthaka**
B.Tech in Manufacturing Technology (2016/2017/B2)



**K P M N Karunanayaka**
B.Tech in Quantity Surveying (2016/2017/B2)



**R.S.V.A.K.Wijethunge**
B.Tech in Industrial Management Technology (2016/2017/B2)



**P K S D Ekanayake**
B.Tech in Film and Television Production Technology (2016/2017/B2 )



**H L D D Liyanarachchi**
B.Tech in Food Process Technology (2016/2017/B2)



**M Pavucsan**
B. Tech in Software Technology (2017/2018/B1)



**R.N.Deshan**
B. Tech in Software Technology (2016/2017/B2)



**J.A.D.P.Jayasuriya**
B. Tech in Network Technology (2017/2018/B1)



**W A S R Wijayasena**
B. Tech in Network Technology (2016/2017/B2)



**M.M.N Sarfa**
Bachelor of Education in Technology (2017/2018/B1)



**E. M. G. G. K. Ekanayake**
Bachelor of Education in English Language Teaching (2017/2018/B2)



**A. M. Nowferdeen**
Bachelor of Education in English Language Teaching (2016/2017/B2)

0112 630 700
www.uovt.ac.lk

Director General
University of Vocational Technology
No.100
Kandawala, Rathmalana,
Sri Lanka
20th April 2022

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 07ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்

உருவத்தை விட ஊக்கமே வலிவானது என்பதற்கு எடுத்துக்காட்டு, கொழுத்த உடம்பும் கூர்மையான கொம்புகளும் கொண்ட யானை, தன்னைத் தாக்க வரும் புலியைக் கண்டு அஞ்சி நடுங்குவதுதான்.

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் அக்கறை அவசியம்

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி தீவிர நிலையை அடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள அதே நேரம், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகளும் அதிகரித்த வண்ணமுள்ளன.

இதன் விளைவாக நாட்டு மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதன் காரணத்தினால் தலைநகர் உட்பட நாட்டின் சில பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியைத் தணித்துக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பரந்த அடிப்படையில் முன்னெடுத்துள்ளது.

அந்த அடிப்படையில் இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகள் இந்நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்தத் தேவையான உதவி ஒத்துழைப்புகளை வழங்கி உள்ளன. அத்தோடு இந்நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார ரீதியிலான இந்நெருக்கடிக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையிலான தீர்வுகளுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் முன்னணி பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நெருக்கடிக்குத் தீர்வு தேடும் வகையில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றுடனும் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடல்களில் திருப்திகரமான பதில்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதியமைச்சு செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்டோர் அடங்கலான உயர் மட்டக் குழுவினர் சர்வதேச நாயண நிதியத்தின் உயரதிகாரிகளுடன் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தலைமையகத்தில் தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். ஐந்து நாட்கள் நடைபெறும் இப்பேச்சுவார்த்தை நேற்று 19 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாறான சூழலில் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'நாடு முகம் கொடுத்துள்ள சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பதற்கான பொறுப்பில் இருந்து விலகப் போவதில்லை' என்று குறிப்பிட்டுள்ளதோடு, 'அதியுயர் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து தேவையான மாற்றங்களைச் செய்வதன் ஊடாக நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்றுள்ளார்.

இதேவேளை, 'இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசியல், பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையும் அவசியமானது. இப்பிரச்சினைக்கு விரைவாகவும் நடைமுறை ரீதியாகவும் தீர்வு காண அரசியலமைப்பு திருத்தம் அவசியம்' என்று நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 'அரசியலமைப்புக்கான 19 வது திருத்தத்தில் அத்தியாவசியமான திருத்தங்களை ஜனநாயக ரீதியில் சரியான நேரத்தில் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவது குறுகிய காலத்தில் மேற்கொள்ளக் கூடிய சாத்தியமான மிகச் சிறந்த தீர்வாகும்' என்றுள்ளார்.

இவ்வாறு இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண பரந்த அடிப்படையிலான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்தச் சூழலில் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும். இது தொடர்பில் பிரதமர் ஏற்கனவே எதிரணிக் கட்சிகளுக்கு அழைப்பும் விடுத்துள்ளார். அந்த அழைப்பு இன்றும் செல்லுபடியாகும் என்றும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது முற்றிலும் காலத்திற்கு பொருத்தமான அழைப்பாகும்.

இப்பொருளாதார நெருக்கடியின் உண்மையான தாக்கத்தையும் அழுத்தங்களையும் கருத்தில் கொண்டு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு தீர்வு தேடுவதே ஆரோக்கியமான செயற்பாடாக இருக்கும். அவ்வாறான செயற்பாடுதான் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக அமையும். இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே மக்களின் ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது. இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை மக்கள் விழிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்களை உண்மையாக நேசிப்பவர்கள் யார் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் அரசாங்கம் தமக்கு உள்ள பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவதில் உச்சபட்சம் கவனம் எடுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே இந்நெருக்கடிக்கு விரைவாகத் தீர்வு காண முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவி, ஒத்துழைப்புகளை நல்குவது இந்நாட்டுப் பிரஜைகளின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மட்டக்களப்பின் முடிசூடா மன்னனாக திகழ்ந்த செல்லையா இராஜதுரைக்கு விசேட கௌரவம்

## 'தமிழ் வான் அவை' ஊடாக 'சித்திரைப் பெருமகனார்' தலைப்பில் இணையவழி நிகழ்வு



திருமதி கௌசி சிவபாலன் ஜெர்மனியிலிருந்து நடத்தும் 'தமிழ் வான் அவை' ஊடாக 'சித்திரைப் பெருமகனார்' என்ற தலைப்பில் ஒரு விசேட கௌரவிப்பு நிகழ்வு கடந்த 17.04.2022 அன்று இணையவழியூடாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் சித்திரைப் பெருமகனாராக சிறப்பு கௌரவம் பெற்றவர் மட்டக்களப்பு மண்ணின் 'முடிசூடா மன்னர்' என்றும், 'சொல்லின் செல்வர்' என்றும் மக்களால் போற்றப்படுகின்ற முன்னாள் அமைச்சர் செல்லையா இராஜதுரை ஆவார். இவர் இலங்கையின் முன்னாள் தூதுவராகவும் கடமையாற்றியுள்ளார்.

செல்லையா இராஜதுரை அவர்கள் 27.07.1927 ஆண்டு பிறந்தார். இவர் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வி கற்று,பின்னர் எழுத்தாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றினார்.

பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சியில் இணைந்து 1956 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். தொடர்ந்து நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிவாகை சூடி, 1989 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் இவர் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசுடன் இணைந்து அமைச்சராகவும் இருந்துள்ளார். இறுதியாக தூதுவராக மலேசியாவில் பணிபுரிந்து பின்னர் ஓய்வு பெற்றார்.

தமிழ் வான் அவை, அகவை 95 ஐ அடைந்த இராஜதுரை அவர்களை கௌரவம் செய்ய வேண்டும் என்ற விருப்போடும்,கடமையோடும்' சித்திரப் பெருமகனார்' என்ற நிகழ்வை நடத்தியது. இந்த நிகழ்வானது அவரின் அரசியல் சார்ந்த பக்கங்களைத் தவிர்த்து அவரது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் பக்கங்களைப் பற்றியும், அவர் தனது மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைகள் பற்றியும் அலசி ஆராய ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

திருமதி கௌசி சிவபாலன் மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த நிகழ்வின் நாயகனையும்,அவரது குடும்ப உறுப்பினர்களையும், மற்றும் பேச்சாளர்களையும் ஒழுங்கு செய்து இந்த நிகழ்வை மிக சிறப்பாக நடத்தி முடித்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட நல்லாசிரியர் வே. பூங்குழலி பெருமாள் வரவேற்புரை ஆற்றினார். அதைத் தொடர்ந்து பேராசிரியர் சி. மௌனகுரு, தனக்கும் இராஜதுரை அவர்களுக்கும் இடையே உள்ள நட்புறவையும், தனது சிறிய வயதில் இராஜதுரையின் தமிழ்ப் பேச்சில், அவரது இலக்கிய ஈடுபாட்டில் பெரிதும் கவரப்பட்டு அவரை நேசிக்கத் தொடங்கியதையும் எடுத்துக் கூறினார்.

தனக்கு ஒரு அரச பதவி பெற்றுத் தர தனது தகப்பனார் இராஜதுரை அண்ணரிடம் கோரினார் என்றும், ஆனால் அண்ணா அதற்கு மறுத்து "இவன் சின்ன உத்தியோகம் பார்க்க வேண்டியவன் அல்லன். உயரத்திற்குச் செல்வான் என்று கூறியதாகவும் பேராசிரியர் மௌனகுரு தனது உரையில் குறிப்பிட்டார்.

அதன் காரணமாக அண்ணன் உருவாக்கிய இசைநடனக்கலை கற்கை கல்லூரியில் இன்று பணிப்பாளராக இருக்க முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. முதலில் இலங்கையிலிருந்து தம்பிராஜா ஈஸ்வரராஜா

பேசினார். இவர் தனது பேச்சில் மட்டக்களப்பு மண்ணுக்கு கிடைத்த பொக்கிஷம் இராஜதுரை ஐயா என்று குறிப்பிட்டார்.

மட்டக்களப்பின் முதலாவது மேயராக இருந்து, அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக 33 வருடங்கள் தொடர்ந்துமக்களுக்கும், மண்ணுக்கும் தன்னால் முடிந்த பணிகளை செய்தவர் என்று நிகழ்வின் நாயகனுக்கு புகழாரம் சூட்டினார்.

அதைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து தவராஜா இராஜேந்திரன் சிறப்புரை ஆற்றினார். இவர் இராஜதுரை பற்றி பலரும் அறியாத பல விடயங்களை தனது உரையில் சொன்னார்.

அடுத்து சிறப்புப் பேச்சாளராக பிரான்சிலிருந்து எம். ஆர். ஸ்டாலின், இராஜதுரை அவர்கள் பற்றி அநேக விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் போது நடனம்,கவிதை, பாடல்கள் நிகழ்வுகளும் இடம் பெற்றன. பல நாடுகளிலும் இருந்து கலந்து கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் விழாவின் நாயகன் இராஜதுரை அவர்கள் பற்றி புகழாரம் சூட்டினர்.

குறிப்பாக அவுஸ்திரேலியாவிலிருந்து பாடும்மீன் ஸ்ரீகந்தராஜா, கனடாவிலிருந்து பாபு, வசந்தகுமார், சிந்தனைப் பூக்கள் பத்மநாதன்,ஜெர்மனியிலிருந்து புத்திசிகாமணி, லண்டனிலிருந்து திருமதி இராஜேஷ்வரி பாலசுப்ரமணியம், பால. சுகுமார், கோவிலூர் செல்வராஜன், இலங்கையிலிருந்து ஜின்னாசெரிபுதீன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இறுதியில் நிகழ்வின் நாயகன் கலாநிதி செல்லையாஇராஜதுரை தனது மகள் திருமதி பூங்கோதையுடன் இணைந்து நடந்த நிகழ்வுகள் தனக்கு நிறைவாக இருந்ததாக மகிழ்ச்சி தெரிவித்தார். பலரது கேள்விகளுக்கும் அவர் பதில் அளித்தார்.

பின்னர் நடந்த கலந்துரையாடலின் போது மண்ணின் மைந்தன் இராஜதுரை அவர்களுக்கு, அவர் வாழும் போதே அவர் வாழ்ந்த மண்ணில், அவர் உருவாக்கிய இசை நடனக் கல்லூரி வளாகத்தில் அவரது உருவச்சிலை வைக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதை எல்லோரும் சேர்ந்தே செய்ய வேண்டும் என்றும் இது பற்றி பின்னர் தெளிவான முடிவு எடுக்கப்படும் என்றும் பேசப்பட்டது. நான்கு மணி நேரம் நீடித்த இந்த சிறப்பு கௌரவிப்பு நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

கோவிலூர்
செல்வராஜன்...

# சமூகத்துக்கு அளப்பரிய பணியாற்றிய ஊடகவியலாளர் அமரர் ஆர். நடராஜன்

## 31 ஆம் நாள் நினைவு தின நிகழ்வுகள் நேற்று அனுஷ்டிப்பு



அக்கரைப்பற்று ஊர்ப்போடியார் வீதி, வேலாப்போடி இரத்தினம்_ மாணிக்கப்போடி தம்பதியரின் மூத்த புதல்வராக 22.08.1958 இல் நடராஜன் அவர்கள் பிறந்தார். நடராஜன் தனது ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிசன் பாடசாலையில் பயின்றார். தனது உயர்கல்வியினை முஸ்லிம் மத்திய கல்லூரியில் வர்த்தக பிரிவில் பயின்றார்.

1986 இல் பனங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த கௌரி என்பவரைத் திருமணம் செய்தார்.

ஸ்ரீ சித்தி விநாயகர் மகாதேவஸ்தனம் (பெரிய பிள்ளையார் கோயில்) உப தலைவராக, பட்டிமேடு கண்ணகி அம்மன் ஆலயத்தின் உபதலைவராக அவர் பதவி வகித்தார். திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் உட்பட பல ஆலயங்களின் நிர்வாக பொறுப்புகளிலும் செயற்பட்டார்.

2004 ஆம் ஆண்டு சுனாமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிவஞான செல்வக்குருக்களின் குடும்ப ஒத்துழைப்புடன் வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.

1980 ஆம் ஆண்டு ஊடகவியலாளராக விரகேசரி பத்திரிகையில் பொத்துவில் நிருபராக இணைந்தார். அதனைத் தொடர்ந்து தினகரன் பத்திரிகையில் பனங்காடு நிருபராக நீண்ட காலம் பணியாற்றினார். லண்டன் பி. பி. சி உலக சேவையில் நிமலராஜனுடன் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஊடகபயிற்சி நெறியில் சிறந்த ஊடக எழுத்தாற்றலுக்கான விருதை வென்றுள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளராக பி.பி.சி தமிழ் வானொலி, உதயன், வலம்புரி, தமிழன், தினப்புயல், தமிழ் தந்தி, தமிழ்மிரர், மெட்ரோ போன்ற ஊடகங்களிலும் பணியாற்றினார். அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தை அமைப்பதில் இவர் பக்கபலமாக இருந்தார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக அகதிகளுடன் அகதிகளாக இடம்பெயர்ந்து கொழும்பில் சில காலம் வாழ்ந்தார். மீண்டும் தனது பிரதேசத்துக்கு வந்து அவர் வாழ்ந்தார். அவரின் எழுத்துக்களால் மக்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

2012ஆம் ஆண்டு சிறந்த மூத்த ஊடகவியலாளர் விருது (ஆலையடிவேம்பு பிரதேச செயலகம்), 2014 ஆம் ஆண்டு அச்சு ஊடகத்திற்கான விருது (கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு), 2016 ஆம் ஆண்டு சிறந்த ஊடகவியலாளருக்கான விருது (மனித உரிமை ஆணைக் குழு), 2017 ஆம் ஆண்டு சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது (அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் அமைப்பு), 2018 ஆம் ஆண்டு கலைஞர் சுவதம் விருது(கலாசார அலுவல்கள் திணைக்களம்) ஆகியவற்றை அவர் பெற்றிருந்தார்.

தமது பகுதியில் செய்தி இணையத்தளமொன்று உருவாக்க வேண்டும் என்பதில் முன்னின்று அதற்கான பாதைகளை அவர் வகுத்தார். அம்முயற்சியினால் பனங்காடு இணையத்தளம் உதயமானது. அத்துடன் ஆலையடிவேம்பு இணையத்தளத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டார் .

பனங்காடு வைத்தியசாலை அபிவிருத்திக்காக பாடுபட்டார். மகா சக்தி கிராமத்தின் உருவாக்கத்திற்கும் ஆரம்ப கர்த்தாவாக செயல்பட்டார். புளியம்பத்தை கண்ணகி கிராமம், அளிக்கம்பை போன்ற பகுதிகளுக்கு மக்களுக்கான பொதுப்போக்குவரத்து பஸ் சேவை, வீதி அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்த ஊடகம் வாயிலாக பாடுபட்டார்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தின் எல்லைக் கிராமமாக காணப்படுகின்றன அளிக்கம்பை பகுதியில் யானைகளில் இருந்து மக்களை பாதுகாத்தல் மற்றும் ஆரம்ப வைத்திய சேவை, பாடசாலையின் அபிவிருத்திகள் போன்றவற்றிலும் இவரது கட்டுரைகள் உதவியுள்ளன.

வட்டமடு மேய்ச்சல் தரை மற்றும் சின்னமுகத்துவாரம், பெரிய முகத்துவாரம் நில ஆக்கிரமிப்புகள், அக்கரைப்பற்று எல்லைகள் தொடர்பாக இவரது எழுத்துகள் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தன. சாந்திபுரம் கிராமத்து குடியேற்றங்களின் பின்னர் மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் யானைகளின் தொல்லையில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் அதிகம் பத்திரிகையில் எழுதியுள்ளார்.




இவ்வாறு தாம் வாழ்ந்த சமூகத்திற்கு அமரர் நடராஜனின் எழுத்துக்கள் பெரிதும் உதவின. அதேசமயம் அவர் ஒரு சிறந்த விவசாயியாகவும் விளங்கினார். வீட்டுக்கு வருவோருக்கு அரிசிப் பொதி கொடுத்து அனுப்புவது அவரது வழக்கமாகும்.

தனது பிரதேச மக்களுக்கு பல்வேறு பணிகளை ஆற்றிய அமரர் நடராஜன் மறைந்து நேற்றுடன் 31 தினங்கள் ஆகும்.

# இஸ்லாமிய ஒற்றுமைக்காக ரமழானில் அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம்!

**புனிதமும் கண்ணியமும் மிக்க அருள் மிகு மாதம் ரமழானின் வருகை, கடமையான நோன்புகளை நிறைவேற்ற நமக்கு வாய்ப்பளிப்பதோடு ரமழான் மாதம் முழுவதும் அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற வேண்டிய நோக்கத்துடன் நம்முடைய உள்ளங்களிலும் நம்மைச் சுற்றி உலகெங்கும் வாழும் முஸ்லிம்களின் உள்ளங்களிலும் வாழ்விலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி விடுகிறது.**

இப்புனிதமான மாதத்திலேயே எல்லாம் வல்ல அல்லாஹ் மானுட வர்க்கத்தை நேரான வழியில் இட்டுச் செல்லும் நோக்கத்தில் புனித குர்ஆனை அருளினான். எமக்கான வழிகாட்டல் அனைத்தும் அதில் இருக்கின்றது. ஆயினும், நாமோ தீர்வுகளுக்காக எங்கெங்கெல்லாமோ அலைந்து கொண்டிருக்கின்றோம்.

உலக முஸ்லிம்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். எல்லா நாடுகளும் ஏதோவொரு சிக்கலில் சிக்குண்டு வெளிவர வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கின்றன என்பது கண்கூடு. இப்பிரச்சினைகள் அனைத்துக்கும் ஒரே தீர்வு இஸ்லாமிய உலகின் ஒற்றுமையாகும். முஸ்லிம் உலகு ஒன்றுபடாதவரை இந்த இழிநிலை தொடரவே செய்யும்.

இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுப்படி, இஸ்லாத்தில் ஒற்றுமை என்பது அனைத்து முஸ்லிம்களுக்கும் ஒரு கடமையாகும். ஒரே புனித நூலை பின்பற்றி ஓர் இறைவனை வணங்கும் ஒரே கிப்லாவை முன்னோக்கும் நாம் அனைவரும் ஒரு உடலின் அங்கங்கள் போல் இருப்பது எமது சன்மார்க்கத்தில் உள்ளதாகும். மேலும் ஒற்றுமை என்பது அல்லாஹ்வின் புனித வேதத்திலும் இறைதூதரின் போதனைகளிலும் வலியுறுத்தப்பட்டுள்ள ஒரு விடயமும் ஆகும்.

இஸ்லாமிய சரித்திரத்தில் பல சிந்தனைப் பிரிவுகள் (மத்ஹபுகள்) தோன்றியுள்ளன. அவற்றில் சில இன்றளவிலும் பின்பற்றப்படுகின்றன, சில வழக்கொழிந்து விட்டன. இம்மத்ஹபுகள் அனைத்துக்கும் அடிப்படை குர்ஆனும் ஹதீஸும் என்பதை நாம் மறத்தல் ஆகாது.

நம்மில் யாராவது ஒரு குழுவினர் நாம் பின்பற்றும் மத்ஹபுக்கு மாற்றமான மத்ஹபைப் பின்பற்றுகிறார்கள் என்றால் அல்லது எங்கள் கருத்துடன் உடன்படவில்லை என்றால், நாங்கள் விரைவாக தீர்ப்பளித்து, சக முஸ்லிம்களை ஒதுக்கி வைக்கும் வழிகளைத் தேடுகிறோம்.

சன்மார்க்க விடயங்கள் சிலவற்றில் கருத்து வேறுபாடுகள் இருப்பது நாம் ஒன்றுபடாததற்கு ஒரு காரணமாக அமைந்து விடக்கூடாது என்று எமது உலமாக்கள் எனும் கல்விமான்கள் கூட வலியுறுத்தத் தவறி விடுகின்றனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

"இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து, அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்' (3:103)

அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பானது, இது உலகளாவிய இயற்கை நியதிகளில் ஒன்றாகும், கருத்து வேறுபாடுகள் ஒரு விடயம் தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்களைக் கொண்டு வருகின்றன, மேலும் அவை இஸ்லாமிய உம்மாவிற்கு ஒரு நன்மை பயக்கும் விடயமும் ஆகும். எமது அழகான தீனுல் இஸ்லாம் பற்றி அறிவை வளர்க்கவும் கற்றுக் கொள்ளவும் இவ்வேறுபாடுகள் நமக்கு வாய்ப்புக்களை வழங்குகின்றன.

வித்தியாசமாக இருப்பது முக்கியம், அதுவே ஒரு வெற்றிகரமான சமூகத்தை உருவாக்குகிறது, அல்லாஹ் விரும்பி இருந்தால், அவன் நம் அனைவரையும் ஒரே மாதிரியாக மாற்றியிருக்க முடியும். ஆனால் அல்லாஹ்வின் நாட்டம் அதுவல்ல.

பொதுவாக எம்மத்தியில் ஒற்றுமை இல்லாமைக்கு காரணம் மார்க்கம் தொடர்பாக பரந்த கல்வியறிவு இன்மையும் குறுகிய மனப்பான்மையும் அடுத்தவர் கருத்துக்கு மதிப்பளியாமையும், சகிப்பித்தன்மை இன்மையும் என்றால் மிகையாகாது. இவையே உம்மா மத்தியில் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

மறைந்த ஈரானிய சிந்தனையாளர், ஷஹீத் ஆயத்துல்லாஹ் முர்தஸா முதஹ்ஹரி அவர்கள், 'முஸ்லிம்களிடையே உள்ள தவறான புரிதல் அவர்களிடையே உள்ள மதவேறுபாடுகளை விட ஆபத்தானது' என்கிறார். ஒரு சிந்தனைப் பள்ளியைப் பின்பற்றுபவர்கள் மற்றொரு சிந்தனைப்பள்ளியைப் பின்பற்றுவோரை தங்கள் கருத்துக்களை அவமதிப்போராக நினைக்கிறார்கள், எனவே அவர்கள் அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறார்கள். (இது முஸ்லிம்கள் மத்தியில் பகைமை உணர்வை வளர்க்கின்றது). உண்மைகளை முன்வைப்பதற்கும், முஸ்லிம்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி, கருத்து வேறுபாடு மற்றும் பிளவுகள் தோன்றுவதைத் தடுப்பதற்கும் உலமாக்களின் உறுதியான பங்கு இங்கே மிக முக்கியமானது," என்று கூறுகின்றார்.



நமக்கு மத்தியில் சிறு சிறு வேறுபாடுகள் இருப்பினும் இஸ்லாம் எம்மை அதன் வரையறைக்குள்ளேயே வைத்துள்ளது என்றும் நாம் அனைவரும் அடிப்படையில் ஒற்றுமையுடன் இருக்கின்றோம் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.



எமக்கிடையே இருக்கும் இந்த ஒற்றுமையின்மை காரணமாக பலஸ்தீன் இஸ்ரேலுக்கு தாரைவார்க்கப்பட்டு விட்டது, இந்தோனேசியாவில் ஒரு பாகத்தை இழந்து விட்டோம், சூடானிலும் ஒரு பாகத்தை இழந்து விட்டோம், லிபியாவும் அமெரிக்காவுக்கு முழுமையாக அடிமையாக்கப்பட்டு விட்டது, ஈராக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சோமாலியா போன்ற நாடுகளில் இலட்சக்கணக்கான எமது உடன்பிறப்புகளை இழந்து விட்டோம். ஒற்றுமையில் தான் எமது பலம் உள்ளது என்று உணராமல், நாம் ஷியா, சுன்னி என்று சண்டை பிடித்து கொண்டிருக்கும் வரை நாம் மீட்சி பெற மாட்டோம்.

இஸ்லாமிய உலகம் நீண்ட காலமாக காலனித்துவவாதிகளின் ஆதிக்கம் மற்றும் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய ஆட்சிகளின் பிடிக்குள் சிக்கியுள்ளது. இச்சக்திகள் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் உள்ளன. எம்மத்தியில் மோதல்களை உருவாக்கி, எம்மை பிரித்தாளும் கொள்கையை அவை கச்சிதமாக செய்து வருகின்றன.

இன்று, முஸ்லிம் உலகில் காளான்கள் போல் வியாபித்துள்ள ஐசிஸ், தாயெஸ், அன்நுஸ்ரா, அல்கய்தா, போகோ ஹறாம், லஷ்கர்இஜாங்வி, சிபாஇசஹாபா போன்ற அமைப்புகளும் முஸ்லிம்களிடையே வேறுபாடுகளை தீவிரப்படுத்துவது மட்டுமல்லாமல், பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களைக்கூட ஈவுஇரக்கமின்றி கொல்கின்றன என்பதை நாம் அடிக்கடி செய்திகளில் பார்க்கிறோம்.

இக்குழுக்கள் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் றஸூலுல்லாஹ்வின் நடைமுறையிலிருந்து வெகுதொலைவில் உள்ளன. இவர்களது செயற்பாடுகளே 'இஸ்லாமோபோஃபியா' எனும் இஸ்லாம் வெறுப்புக்கு காரணமாய் அமைந்துள்ளன. இக்குழுக்கள் பல மேற்கத்திய ஆட்சிகளுடனும் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றனர் என்பதற்கு ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் நிறையவே உள்ளன. சுன்னி முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காகவும், ஷியா முஸ்லிமுக்கு எதிராக அவர்களைத் தூண்டி விடுவதற்காகவும் அவர்கள் சுன்னி என்று பாசாங்கு செய்கிறார்கள். இவர்கள் இஸ்லாம் விரோத சக்திகளின் ஏஜெண்டுகளே அன்றி சுன்னிகளுமல்ல, ஷீஆக்களுமல்ல. முஸ்லிம்களை இவ்வாறு சுன்னி என்றும் ஷீஆ என்றும் பிரித்து வைப்பதற்காக சட்ட விரோத சியோனிச அமைப்புடனும் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் ஒத்துழைக்கிறது என்பது வெளிப்படை.

எனவே இஸ்லாத்தின் எதிரிகளினால் தீட்டப்பட்டுள்ள இந்த சூழ்ச்சியில் இருந்து விடுபட்டு, வேறுபாடுகளுக்கு அப்பால், முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக நாம் உண்மையாக பாடுபட வேண்டும். இஸ்லாமிய உம்மா (சமூகம்) மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த இஸ்லாமிய விழிப்புணர்வு அவசியம். இஸ்லாமிய உலகம் பல்வேறு தேசங்கள், இனங்கள், மொழிகள் மற்றும் தோலின் நிறம் ஆகியவற்றைக் கொண்டதாகும். இது இஸ்லாமிய உம்மத்தை அழகாக்குமே அன்றி ஒற்றுமைக்குத் தடையாக ஒரு போதும் இருக்காது. இதனை நாம் பன்முகத்தன்மையில் ஒற்றுமை காண்பது என்று அழைக்கலாம்.

எல்லா நாடுகளும், மக்களும், இனங்களும், எல்லாவற்றுக்கும் மேலாக, தங்களை ஒரே இறைவனை வணங்குவோராகவும், இறைதூதரை பின்பற்றுபவர்களாகவும் ஒரே கிப்லாவை முன்னோக்குவோராகவும் கருதினால், நமக்குள் இருக்கும் வேறுபாடுகள் கலையப்பட்டு ஒற்றுமையும் அமைதியும் ஏற்படும். அல்லாஹ்வும் அவனுடைய ரசூலும் விரும்பும் ஒற்றுமை நோக்கிய பயணத்தை இந்த புனித ரமலானில் இருந்து ஆரம்பிப்போம் என்று திடசங்கற்பம் பூணுவோம்.

'(நபியே!) உம்மை அகிலத்தார்க்கு ஓர் அருளாக வேயன்றி நாம் அனுப்பவில்லை. (21:107)

**தாஹாமுஸம்மில்...**

# மொழி அழிந்தால் அம்மொழிக்குரிய இனமும் தானாகவே அழிந்து விடும்!

**மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம். மொழி இல்லையேல் ஒரு இனம் இல்லை. மொழி இல்லையேல் ஒரு இனத்தின் இலக்கியங்கள் இல்லை, கலைகள் இல்லை, பண்பாடு இல்லை, மரபுகள் இல்லை, சமயங்கள் இல்லை. ஒரு இனத்தின் இலக்கியங்களை, கலைகளை, பண்பாடுகளை, சமய நம்பிக்கைகளைத் தாங்கி நிற்பது மொழி.**

மொழி அழிந்தால் ஓர் இனம் தானாகவே அழிந்து விடும். மொழி என்பது ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு தன் பண்பாட்டை எடுத்துச் செல்லும் வழி. தமிழ்மொழியானது தனது நீண்ட வரலாற்றுப் பாதையில் பல வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்தது.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினான். 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்று பாரதியார் பாப்பாவுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தார். 'சொல்லுக்குச் சொல்லோர் சுவையிருக்குஞ் செந்தமிழ்' என்றும், 'தனைப் புகழத் தன்னிடத்தோர் சொல்லில்லாத் தமிழ்' என்றும் கவியரசர் கண்ணதாசன் பாடினார். இவையெல்லாம் தமிழின் சிறப்பை, சீர்மையை, அதன் மென்மையை, மேன்மையை ஆய்ந்துணர்ந்து, அனுபவித்து கவிஞர் பெருமக்கள் கூறிய வார்த்தைகள். இத்தகைய சிறப்புமிக்க ஒரு மொழிக்குச் சொந்தக்காரர் நாம்' என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று மகாகவி பாரதி பாடிய அந்த வள்ளுவர் தந்த 'திருக்குறள்' தமிழில் எழுந்த ஒப்பற்ற ஓர் இலக்கியமாகும். உலக அரங்கில் தமிழின் பெருமையை உயர்த்திக் காட்டும் மிகச்சிறந்த நூலாகும்.

திருக்குறள் தமிழில் எழுதப்பட்ட ஒரு நூலாக இருந்தாலும் 'தமிழ்' என்ற ஒரு மொழியின் பெயர் அதில் எங்குமே இல்லை. 'தமிழர்' என்ற ஒரு இனத்தின் பெயரும் அதில் எங்குமே இல்லை. 'தமிழ்நாடு' என்ற ஒரு நாட்டின் பெயரும் அதில் இல்லை. எந்த ஒரு சமயத்தின் பெயரோ அல்லது கடவுளின் பெயரோ அதில் இல்லை. ஆக, ஒரு மொழிக்கோ, ஓர் இனத்திற்கோ ஒரு நாட்டிற்கோ ஒரு சமயத்திற்கோ உரிய நூலாக இல்லாமல் உலகம் அனைத்திற்குமாக எழுதப்பட்ட 'உலகப் பொதுநூல்' திருக்குறள். அதனால்தான் அது உலகப் பொதுமறை என்று போற்றப்படுகின்றது.

மனித குலத்திற்கே பெருவிளக்காக எழுந்து வழி காட்டும் ஒப்பற்ற நூலாக ஒழுக்கவியல் மற்றும் நன்னெறிக் கோட்பாடு பற்றி எழுந்த பெரும் உலக இலக்கியங்களில் ஒன்றாகத் திருக்குறள் விளங்குகிறது. 'மானிட வர்க்கத்தின் மாபெரும் தத்துவப் பேழை' என்று அது உலகோரால் போற்றப்படுகின்றது. திருவிவிலியத்திற்கு அடுத்ததாக அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

தமிழ்மொழி என்ற ஒன்று இருப்பதை உலகத்தினர் அறிந்தது பெரும்பாலும் திருக்குறளால்தான். வீரமாமுனிவர், போப் ஐயர் போன்ற மேல்நாட்டினர் தமிழகத்திற்கு வந்த போது தமிழின் பெருமைய உணர்ந்து திருக்குறளை மொழிபெயர்த்தனர். அதன் காரணத்தால்தான் உலக அளவில் திருக்குறள் வழியாக தமிழின் தொன்மை, தமிழிரின் தத்துவச் சிறப்பு, ஒழுக்கநெறி உலகத்திற்கு தெரியவந்தது.

மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பெற்ற நூல் திருக்குறள். இதுபோன்ற ஒரு நூல் உலகில் எந்த மொழிகளிலும் இதுவரை தோன்றியது இல்லை. சில அடிகளில் உலகத்தின் ஞானக் கருவூலங்களைத் தந்தவர் வள்ளுவர். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டாலும் அது இன்றும் உலக மக்களுக்கு பொருத்தமான,



வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கின்றது.

உலகம் அளாவிய பொதுமைக் கருத்துகளைத் தமிழ் இலக்கியம் தன்னுள் கொண்டுள்ளது. 'உலகளாவிய சகோதரத்துவம்' பற்றிய சிந்தனை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே – அதாவது மனிதன் நாகரீக வளர்ச்சி அடைவதற்கு முன்னமே தமிழ் மொழியில் இருந்துள்ளமை உலக மொழியியல் அறிஞர்களை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்துள்ளது.

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ் விழாவின் போது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் ஆற்றிய உரை**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' அதாவது எல்லா ஊரும் என்னுடைய ஊரே எல்லா மக்களும் என்னுடைய உறவினர்களே என்றும் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' அதாவது 'தீமையும் நன்மையும் மற்றவரால் உருவாக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் நாம்தான்' என்றும் கூறிய கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று அடிகளும், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் திருமந்திர வாக்கும், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருநாவுக்கரசரின் பக்தி இலக்கியக் கூற்றும், 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற ஔவைப் பிராட்டியின் வாக்கும் இன்னும் இதுபோன்ற பலவும் தமிழ் இலக்கியத்தின் பரந்துபட்ட உலகமனப்பான்மையின் வெளிப்பாடுகளாக உள்ளன.

தமிழர்களாகிய நாம் நமது பழம் பெருமை பேசியே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றோம். இன்று எனது சூழல், எனது வாழ்க்கை நிலையில் இருந்து கொண்டு எனது மொழியை, எனது பண்பாட்டை வளர்க்க, மேம்படுத்த நான் என்ன செய்ய முடியும் என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். கூடியவரை பிறமொழிக் கலப்பில்லாமல் குறிப்பாக ஆங்கில மொழிக் கலப்பில்லாமல் நாம் தமிழைப் பேசலாம். தமிழில் கையெழுத்துப் போடுகின்ற பழக்கத்தை உருவாக்கலாம். இயன்றவரை நமது நடை, உடை, பாவனையில் நமது தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கலாம். நமது மொழி, பண்பாடு இவற்றை மென்மேலும் அறிய நாம் முயற்சி எடுக்கலாம்.

தமிழ் உலகின் மூத்தமொழி மட்டுமல்ல, முதல் செம்மொழியும் ஆகும். இந்தத் தமிழ்மொழிதான் தமிழர்களுக்கு வழி, அதுதான் தமிழர்களுக்கு உயிர். அதனால்தான் பாவேந்தர் பாரதிதாசன், 'தமிழுக்கு அமுதென்று பேர்! அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாடினார். 'சாம்போதும் தமிழ் படித்துச் சாதல் வேண்டும் எந்தன் சாம்பலும் தமிழ்மணத்து வேதல் வேண்டும்' என்று ஈழத்துக் கவிஞர் சச்சிதானந்தம் சொல்கின்றார்.

நம் தாயாக, நம் தெய்வமாக, நம் வழியாக, நம் விழியாக, நம் உயிராக மூச்சாக இருக்கின்ற தமிழை வளர்ப்போம், வாழ வைப்போம் என்று உறுதி பூணுவோம்.





# உலகப் புகழ் அஜந்தா ஓவியக் குகைகளுக்குள் நீர் விநியோகம் இரு வருடங்களாக நிறுத்தம்!

**உலகப் புகழ் பெற்ற இந்தியாவின் முன்னணி சுற்றுலாத் தலமான அஜந்தா ஓவியக் குகைகளுக்குள் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணமும் தற்போது வெளியாகியுள்ளது.**

உலகப் புகழ் பெற்ற அஜந்தா ஓவியக் குகைகள் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் ஔரங்காபாத் மாவட்டத்தில் இருக்கின்றன. இங்கு ஏராளமான பழம்பெரும் குகை சிற்பங்கள், பாறை ஓவியங்கள் நிறைந்துள்ளன. அஜந்தா குகைகள் வகோரா நதியின் பள்ளத்தாக்கில் சயாத்ரி குன்றின் மேல் அமைந்துள்ளன. இந்த இடம் அமைதியான சூழலை உடையது. மொத்தம் 30 குகைகள் இதே இடத்தில் உள்ளன.

மிகப் பெரிய தூண்களுடன் கூடிய மண்டபங்கள், புத்தர் பெருமான் சிலைகள், ஓவியங்கள் என ஒவ்வொரு பகுதியும் வியப்பில் ஆழ்த்துகின்றன. ஒரேஞ்ச், நீலம், பச்சை போன்ற குறிப்பிட்ட நிறங்களில் இந்த ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். திறமையான தொழில்நுட்பம் தெரிந்தவர்களால் மட்டுமே இவற்றை உருவாக்கியிருக்க முடியும். காரணம், 1500 ஆண்டுகள் கடந்தும் இந்த ஓவியங்கள் நிலைத்து இருப்பதற்குக் காரணம் அந்த கலைஞர்களின் நுட்பம் மட்டுமே ஆகும்.

குகை சிற்பங்கள், பாறை ஓவியங்கள் உள்ள பல்வேறு கலை அம்சங்கள் நிறைந்த அஜந்தா குகைகள் யுனெஸ்கோ நினைவுச் சின்னங்களில் ஒன்றாக திகழ்கின்றன. இந்தக் குகைகள் இன்று வரை நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றாலும், மரங்களும் புதர்களும் அடர்த்தியாக வளர்ந்து குகைகளை தற்போது முற்றிலுமாக மறைத்து விட்டன.

இந்நிலையில் தற்போது ஒரு முக்கிய பிரச்சினை எழுந்துள்ளது. அஜந்தா குகைகளுக்குள் தண்ணீர் வரவில்லை. தண்ணீர்க் கட்டண நிலுவைத் தொகை செலுத்தாததன் காரணமாக 2 வருடங்களாகவே இங்கு தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தண்ணீர் கட்டணம் ஏன் கட்டப்படவில்லை என்று தெரியவில்லை.

அஜந்தா குகைகளுக்கு எப்போதுமே மகாராஷ்டிராவின் 'ஜீவன் பிரதிகாரன்' என்ற அமைப்புதான் தண்ணீர் விநியோகம் செய்து வருகிறது. மகாராஷ்டிரா சுற்றுலாத் துறை ரூபா 3.2 கோடி பணம் பாக்கி உள்ளது. தினந்தோறும் ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து குவியும் போது, 2019 இல் இருந்தே தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. தண்ணீர் இல்லாததால், இங்குள்ள பூங்காவை முறையாக பராமரிக்கவும் முடியவில்லை.. மேம்பாட்டு பணிகளிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் இங்கு வந்திருந்த சுற்றுலா அமைச்சர் ஆதித்யா தாக்கரேவிடம் தண்ணீர்ப் பிரச்சினையை பற்றி புகார் சொல்லியும் இப்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நிர்வாகத்தினர் கவலை தெரிவிக்கிறார்கள். உலகப் புகழ்பெற்ற அஜந்தா குகைக்குள் தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளமை அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.






# குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கை

## நீண்ட நேரம் வரிசையில் காத்திருப்பதாக மக்கள் புகார்





**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய காரியாலயம் முன்னால் கடவுச் சீட்டு பெறுவதற்காக மக்கள் 5 மணித்தியாலத்திற்கு மேலாக வீதியில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா, உள்வட்ட வீதியில் வடமாகாணத்திற்கான குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தில் புதிதாக கடவுச் சீட்டை பெறுதல், கடவுச் சீட்டை புதுப்பித்தல் உள்ளிட்ட தேவைகளுக்காக காலை 6 மணிக்கு முன்பிருந்தே மக்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில் காலை 8.30 இற்கு அலுவலகத்திற்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சுமார் 50 பேர் வரையில் கடவுச் சீட்டு வளாகத்திற்குள் அனுமதித்து விட்டு ஏனையவர்களை வீதியில் நிற்க வைத்தனர். வீதியில் சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்கள் காலையில் இருந்து காத்து நிற்கின்ற போதும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ தமக்கு சரியான பதிலை வழங்காது நீண்ட நேரம் காத்து நிற்க வைத்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் வட மாகாணத்தின் பல இடங்களில் இருந்தும் தாம் வருகை தந்துள்ளதாகவும் குடிவரவு குடியகல்வு அலுவலகத்தில் மக்களுக்கான இருக்கைகள் வெறுமையாக உள்ள போதும் தம்மை உள்ளே எடுக்காது வீதிகளில் நிற்க வைத்துள்ளனர். அத்துடன், ஒரு மணியுடன் அவர்கள் இனி உள்ளே எடுக்க முடியாது எனக் கூறி கடந்த சில நாட்களாக திருப்பி அனுப்பியதால் சிலர் மூன்று தினங்களாக வந்து செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.





வட்டுக்கோட்டை ஸ்ரீ பிரித்தியங்கிராதேவி ஆலயத்தில் ஸ்ரீ சாமுண்டா பத்திரகாளி அம்பாள் பிரதிஷ்டை அண்மையில் நடைபெற்றது. மேலும் ஸ்ரீ சரபேஸ்வரர், நாகராஜா, நாகராணின் மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.

# சைக்கிளில் சென்றவர் வீதியில் மயங்கி விழுந்து மரணம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் சைக்கிளில் சென்ற ஒருவர் திடீரென வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் 18/04 திங்கட்கிழமை எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி டச் வீதிப்பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரே இவ்வாறு வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

# பேராசிரியர் இராஜேஸ்வரி மகேஸ்வரன் காலமானார்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒய்வு பெற்ற இரசாயனவியல் பேராசிரியரும், இரசாயனவியல் துறையின் முன்னாள் துறைத் தலைவருமாகிய பேராசிரியர் இராஜேஸ்வரி மகேஸ்வரன் கடந்த 17 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது விஞ்ஞானமானி (சிறப்புப்) பட்டத்தை 1968 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்த பின்னர் 1972 இல் பிரித்தானியா ஷெஃவீல்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றார்.

1976 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் துறையில் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் இத்துறையைக் கட்டியெழுப்புவதில் அரும்பணியாற்றி 1986 இல் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டு 1993 இல் சிரேஷ்ட பேராசிரியரானார்.

தமிழர் தாயகத்தின் மிகவும் சவாலான காலப்பகுதிகளில் துறைத்தலைவராகப் பலமுறை பணியாற்றி இரசாயனவியல் கல்வியின் தரத்தை உரிய முறையில் பேணியவர்.

தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக இருந்த சமயத்தில் அதன் முதல்வராக 2003 தொடக்கம் 2006 வரை கடமையாற்றியுள்ளார். 2010 இல் பல்கலைக்கழக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலண்டனில் வசித்து வந்த பேராசிரியர் இராஜேஸ்வரி மகேஸ்வரன் கடந்த 17 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை அன்று காலை காலமானார்.

# உடுப்புக்குளத்தில் வீரபத்திரர் ஆலய சித்திரை பௌர்ணமி விழா



முல்லைத்தீவு உடுப்புக்குளத்தில் உள்ள வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த சித்திரை பௌர்ணமி பெருவிழா கடந்த சனிக்கிழமை பெருமளவு பக்தர் கூடலுடன் நடைபெற்றது.

மதியம் பன்னிரண்டு மணிக்கு ஆரம்பமான வளர்ந்து வைத்தல், பூஜை நிகழ்வுகளுடன் விசேட அன்னதான நிகழ்வும் நடைபெற்றது. தாயின் ஆத்ம சாந்திக்காக கடைப்பிடிக்கப்படும் சித்திரை பௌர்ணமி விரத நிகழ்வுகளை அடிப்படியாக கொண்ட திருவிழாவாக இது அமைந்திருந்தது.

உடுப்புக்குளம் கிராம மக்களின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான சிந்து நடைக் கூத்து வடிவிலமைந்த " மாலைக்கு வாதாடிய மைந்தன்" என்ற காத்தவராயன் சரித்திரபுராண நாடகம், மாலை ஏழு மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வைத் தொடர்ந்து காலை பூசை நிகழ்வுகளோடு இனிதே நிறைவு பெற்றது.

கிராம மக்களின் ஒற்றுமை மற்றும் கலைத்திறன், ஆன்மீக ஈடுபாட்டை வளர்த்து வரும் வகையில் இவ்வாலயம் தொடர்ந்து சிறப்பாக செயலாற்றி வருகின்றது.

கடந்த ஐம்பதாண்டுகளாக காத்தவராயன் சிந்து நடைக் கூத்து இக் கிராம மக்களால் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்து

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஏ 9 வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் குறுக்கு வீதி ஒன்றினுள் நுழைய முற்பட்ட வேளையில் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் சங்கத்தானை சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 47 வயதான பெண் ஒருவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பாழடைந்த கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் மரணம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, மதுராநகர் பகுதியில் பாழடைந்த கிணற்றில் தவறி விழுந்து 10 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 10 வயதுடைய கனசுந்தரம் சம்சன் என்ற சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (18.04) மாலை இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, மதுராநகர் பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த 10 வயது சிறுவன் அருகில் காணப்பட்ட பாதுகாப்பற்ற பாழடைந்த கிணற்றில் மீன் பிடிப்பதற்காக தூண்டில் போட்ட போது தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். மகனை காணவில்லையென தந்தை தேடிச் சென்ற போது தூண்டிலுடன் கிணற்றில் விழுந்து கிடந்துள்ளார். இதனையடுத்து அயலவர்கள் துணையுடன் மீட்கப்பட்ட போதும் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் படையினர் வசம்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன்

**ஓமந்தை விஷேட நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை படையினர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நிலஆக்கிரமிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழர் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான படையினர் குவிப்பும், படையினரின் அடக்குமுறைகள், நிலப்பறிப்புக்கள், படையினர் தமக்கேற்ற விதத்தில் புத்தமத திணிப்புக்கள், வியாபார நடவடிக்கைகள் என வட பகுதியில் படையினர் சம்பந்தமான குவிப்புக்களும், படையினரின் ஆதிக்கங்களும் ஏராளம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை படையினர் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள். அளம்பிலில் தனியார் காணியை அபகரித்து தோட்டச்செய்கையிலும், கிறீன் ஜெக்கெட் எனும் பெயரில் செம்மலையில் சுற்றுலா விடுதியும், புதுக்குடியிருப்பில் மரக்கறி செய்கை பண்ணை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரும், கோம்பக சந்தி என்று கூறப்படும் வேம்படி சந்தியில் பல ஏக்கர் காணி அபகரிப்பும் தோட்டச்செய்கையுடன் பொதுவிற்பனை தளம் என பலவாறாக படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக பல்வேறு அடையாள, கவனயீர்ப்பு போராட்டங்கள் நடத்தி வருகின்றோம். அச்சுறுத்தும் விதமாக புலனாய்வாளர்களின் நடவடிக்கை, இராணுவம் குவிக்கப்படுதல், பொலிஸார் வழக்குப் பதிவு செய்தல் என ஏராளம் என மேலும் தெரிவித்தார்.

# 'தென் உதயதாரகை' நூல் வெளியீட்டு விழா



**சாவகச்சேரி விசேட நிருபர்**

கச்சாய் ஊரைச் சேர்ந்த புலவர் அமரர் சின்னையினாரின் "தென் உதய தாரகை" நூல் வெளியீட்டு வைபவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ கிருபாகரக்குருக்கள் வழங்கி விழாவினை ஆரம்பித்து வைத்திருந்தார்.

மேலும் நூல் வெளியீட்டு உரையை பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும், ஆய்வுரையை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா, விமர்சன உரையை தென்மராட்சி பிரதேச செயலக கலை கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன்,ஏற்புரையை புலவர் சின்னையினாரின் பேர்த்தி திருமதி பூங்கோதை ஆகியோர் ஆற்றியிருந்தனர். நூலின் முதற்பிரதியை சிரேஷ்ட ஊடகவியலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் பெற்றிருந்தார்.

மேலும் நிகழ்வில் கச்சாய் தமிழ் இலக்கிய மன்ற போசகரும், சட்ட ஆய்வாளருமான இ.சோதிநாதன்,சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள்,பிரதேசசபை உத்தியோகத்தர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாணத்தில் 313 பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

**(நிந்தவூர் குறூப் நிருபர்)**

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றி வருகின்ற 313 பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகத் தேர்வு திருகோணமலை – கிழக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களை நியமிப்பதற்காக இடம்பெற்ற இந்த தேர்வில், தெரிவு செய்யப்படுகின்ற 75 பேர் மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ளனர். ஏனைய 238 பேர் தேசிய பாடசாலை மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், நேற்று (19) தெரிவித்தார்.

இந்த நேர்முகத் தேர்வு ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார், விவசாய அமைச்சின் செயலாளர் ஜ.கே.முத்துபண்டா, பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜலீல் மற்றும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மாகாண ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய ஏ.எல்.எம். அஸ்மி ஆகியோர் இத்தேர்வுகளை நடாத்தியுள்ளனர். இத்தேர்வில், தெரிவு செய்யப்படும் 75 அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 73 பேர் தமிழ் மொழியிலும், 02 பேர் சிங்கள மொழியிலும் நியமிக்கப்படுவர். அதேவேளை பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்ற 238 பேரில் 227 பேர் தமிழ்மொழிக்காகவும், 11 பேர் சிங்கள மொழிக்காகவும் நியமிக்கப்படவுள்ளதாகவும் கிழக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர் தெரிவித்தார்.



பாடசாலை பண்புசார் விருத்தியில் இணைப்பாட விதான செயல்பாடு எனும் தொனிப் பொருளில், ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிறாஜுதீன் சேனைக்குடியிருப்பு கணேசா வித்தியாலயத்தில், ஆசிரியர்களுக்கு விளக்கமளிப்பதை படத்தில் காணலாம். (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## காத்தான்குடி ஊடகவியலாளர்களுடன் பள்ளிவாசல் சம்மேளனம் சந்திப்பு

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன பைதுஸ்ஸகாத் அமைப்புக்கும், காத்தான்குடி ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை (18) மாலை இடம்பெற்றது.

காத்தான்குடி கடற்கரை மினா விடுதியில் நடந்த இச்சந்திப்பில்,பைதுஸ் ஸகாத் தலைவர் மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.அப்துல் கபூர் மதனி, பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.ஆதம் லெப்பை பலாஹி, செயலாளர் எம்.எம்.றமீஸ் ஜமாலி, ஜம்இய்யதுல் உலமா தலைவர் ஹாறூன் றசாதி உட்பட பைதுஸ் ஸகாத் உறுப்பினர்ளும், ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன பைதுஸ் ஸகாத் அமைப்பு தொடர்பாகவும் தற்போதய நிலவரம் தொடர்பாகவும் எடுத்துக் கூறினர்.

## பத்ர் ஸஹாபாக்கள் கந்தூரி மஜ்லிஸ்

கல்முனை சுன்னத்வல் ஜமாஅத் இறாக் நட்புறவு ஒன்றியம், மஸ்ஜிதுல் பத்ரிய்யஹ் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் புனித பத்ர் ஸஹாபாக்கள் கந்தூரி மஜ்லிஸ் இம்முறை 34 ஆவது வருடமாக இடம்பெற்றது.

கல்முனை மஸ்ஜிதுல் பத்ரிய்யஹ்வில் கடந்த திங்கட்கிழமை (18) ஷெய்குனா, ஞானபிதா, ஆரிப்பில்லாஹ், ஷம்சுல் உலமா, அல் ஹாஜ் ஏ. அப்துர் றஊப் மிஸ்பாஹீ, பஹ்ஜியின் திருக்கரங்களாலும், அஷ்ஷெய்க் அஷ்ஷெய்யிதுஸ் ஷாதாத் "மௌலானா மௌலவி அஹமது தங்கள் மௌலானா வாப்பாவின் திருக்கரங்களாலும் புனித திருக்கொடி மற்றும் சந்தனக்கூடு ஏற்றி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பத்ர் ஸஹாபாக்கள் நினைவாக சந்தன மணம் கமழும் பத்ர் மௌலித் மஜ்லிஸ் நடாத்தப்பட்டது. பின்னர், துஆ பிராத்தனையுடன் மஜ்லிஸ் நிகழ்வுகள் யாவும் நிறைவுற்றன. மேலும் நேற்று (19) செவ்வாய்க்கிழமை கந்தூரி அன்னதானமும் வழங்கப்பட்டது.



இந்நிகழ்வில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், சுன்னத்வல் ஜமாஅத் இறாக் நட்பறவு ஒன்றிய நிர்வாகத்தினர், மஸ்ஜிதுல் பத்ரிய்யஹ் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## உலக சுகாதார தினத்தை முன்னிட்டு உடற்பயிற்சி நிகழ்வுகள்



**(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)**

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு திருகோணமலை பிராந்திய சுகாதார திணைக்களம் ஏற்பாடு செய்த உடற்பயிற்சி நிகழ்வு, அண்மையில் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம். ஹாரீஸ் பயிற்சியாளராக கலந்து கொண்டு, உடற்பயிற்சிகளை நெறிப்படுத்தினார். இதில் வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



**(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)**

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில், புதிதாக தரம் ஒன்றுக்கு சேரும் மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று(19) அதிபர் க.செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

புதிதாக பாடசாலைக்கு இணையும் மாணவர்களை, தரம் இரண்டிற்கு செல்லும் மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச். றியாஸா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அத்துடன் பிரதி அதிபர்களான ஆர். சண்முகநாதன், பி.இராதகிருஸ்ணன் உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## ரமழான் உலர் உணவு பொருட்கள் விநியோகம்

**(அக்கரைப்பற்று வடக்கு நிருபர்)**

அக்கரைப்பற்று பிரதேசத்தில் வசதி குறைந்த தேவையுடையோருக்கு ஐகோனிக் யூத்ஸ் மற்றும் இன்ஸ்பிரீன் யூத்ஸ் ஆகிய சமூக சேவை அமைப்புகள் இணைந்து ரமழான் கால உலர் உணவுப் பொருட்கள் திங்கட்கிழமை (18) வழங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், 5000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள், வாங்காமம் சபா கிராமம் மற்றும் ஸக்காத் கிராமத்திலுள்ள சுமார் 485 ஏழைக் குடும்பங்களுக்கு இந்த பொதிகள் வழங்கப்பட்டன.

இதே போன்று இன்னும் 1000 ஏழைக் குடும்பங்களுக்கு இப்பொதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## வாழ்க்கைச் சவால்களை முறியடிக்க அனுபவங்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகள் என்பன எதிர்காலத்தில் கல்வி சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றுவதற்கான அனுபவத்தை பெற்றுக் கொடுக்குமென, மனிதாபிமான சமூகசேவை அமைப்பின் தலைவர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில், அவர் தொடர்ந்து உரையாற்றியதாவது,

அனுபவங்கள் மனித வாழ்க்கையின் முன்னேறத்துக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் ஒன்றாகும். இந்த அனுபவங்களை பணியாற்றும் இடங்களிலேயே மறந்து விடுவது, வாழ்க்கையில் பிரச்சினைகள் பலவற்றை தீர்ப்பதற்கு உதவாமல் போகலாம்.

பாடசாலை காலங்களில் மிகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டி மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற ஆசிரியர்கள் ஆற்றிய பணி அளவிடமுடியாதது.

எப்போதும், ஒரே இடத்தில் ஒரே விதமாக வாழ வேண்டுமென நினைப்பது ஒரு மனிதனின் சாதாரண இயல்பு. ஆனால் இயற்கை நியதி அவ்வாறல்ல. இந்த உலகில் நாளுக்கு நாள் மாற்றங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

அதற்கு ஏற்றவாறு நாமும் மாறிச் செல்ல வேண்டும். மாற்றங்களை திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கை நாம் அனைவருமே வளர்த்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த பிரமோற்சவ பெருவிழா

**(ஏறாவூர் குறூப்நிருபர்)**

மட்டக்களப்பு வாழைச்சேனை கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவ பெருவிழாவின் தேர்த் திருவிழா, இரண்டு வருடங்களின் பின்னர் பக்திபூர்வமாக நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச்சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் இரதோற்சவ திருவிழாவில் பங்கேற்றனர். கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் இந்த வருடாந்த பிரமோற்சவ பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பிரமோற்சவ பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ மா. குலேந்திரரூப குருக்கள் தலைமையில் நடைபெற்ற இத்திருவிழாவில், யாழ்ப்பாணம், கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீஜயப்பன் தேவஸ்தான குருவான சிவாகமரத்ன ஆனந்த அருள்ஜோதி, சபரி ஐயப்பன் உபாசகர், சிவஸ்ரீ ஹரிஹரசுத சிவாச்சாரியார், பிரமோற்சவ சிறப்பு பிரதம குருவாக பணியாற்றினார். ஆஞ்சநேய உபாசகர் சர்வசாதக இளஞ்சுடர் சிவத்திரு நவதாஸ சர்மா உள்ளிட்ட குருக்கள் உதவிக் குருக்களாக பணியாற்றினர்.

சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## மூதூர் தோட்ட மக்களுக்கு பயிர்க்கன்றுகள் விநியோகம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் மேற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நாணல் சேனை, உப்புக்காச்சிமடு கிராம மக்கள் தமது தோட்டக் காணிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மரக்கறிப் பயிர்களை உற்பத்தி செய்யும் நோக்குடனே இவர்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்வதாக தெரிய வருகிறது. இதனால், இவர்களுக்கு பயிர்க்கன்றுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

மிக நீண்ட காலமாக உப்புக்காச்சிமடு, நாணல் சேனை கரைச்சை வீதிகள் சேறும், சகுதியும் கொண்டதாக காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ. அரூஸிடம் இக்கிராம மக்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் தற்போது இவ்வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

## கந்தளாய் குளத்தில் பலியானோரின் 36 ஆவது வருட நினைவு தினம்

**(கந்தளாய் தினக்கரன் நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் குளம் உடைந்து ஐம்பதுக்கும் மேலானோர் பலியான 36 ஆவது ஆண்டு நினைவு தினம் கந்தளாய் கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் இன்று (20) நினைவு கூரப்படவுள்ளது. இந்நிகழ்வு, கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாலை நான்கு மணியளவில் நடைபெறவுள்ளது.

கந்தளாய் குளம் 1986.04.20 குளம் உடைந்ததில், ஐம்திற் கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதில், பல சொத்துச் சேதங்களும் ஏற்பட்டன. இதனை நினைவு கூரும் முகமாகவே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி மற்றும் சமயத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## இப்தார் நிகழ்வில் மறைந்த உறுப்பினர்களுக்காக பிரார்த்தனை

**(கல்குடா தினகரன் நிருபர்)**

வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டு கழகம் வருடாந்தம் நடாத்தும் இப்தார் நிகழ்வு, விஷேட துஆ பிராத்தனை என்பன அண்மையில் (16) இடம் பெற்றது.

வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்தின் தலைவர் இஸட். எம்.றிஹாஸ் இஸ்மாயில் தலைமையில், வாழைச்சேனை ஹைறாத் பள்ளிவாசலில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வில், மரணமடைந்த கழக உறுப்பினர்களான அல் ஹாஜ் நௌபிர், ஏ.எஸ். நௌபர், கழக அங்கத்தவர்களின் மரணித்த பெற்றோர்களுக்காகவும் யாஸின் சூரா ஓதப்பட்டு துஆ பிராத்தனையும் இடம் பெற்றது. இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர், முன்னாள் தவிசாளர் ஐ.ரீ. அஸ்மி, சட்டத்தரணிகளான எச்.எம். எம்.ராசிக், இல்யாஸ் ரஸ்மி, பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

### மாட்டுச்சாணத்துக்குள் மறைத்து

## மரங்களை கடத்தும் முயற்சி முறியடிப்பு



**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

கூட்டெரு தயாரிப்பதற்காக மாட்டுச் சாணத்தை ஏற்றிச் செல்லும் பாணியில் நடைபெற்ற பாரிய மரக்கடத்தல் முயற்சியை, ஏறாவூர் பொலிஸார் முறியடித்துள்ளனர். இந்தக்கடத்தல் முயற்சி நேற்று (19) அதிகாலை மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது. மாட்டுச்சாணங்களால் மறைக்கப் பட்டு, உழவு இயந்திரத்தில் ஏற்றிச்செல்லப்பட்ட ஒரு தொகை தேக்கு மரக்குற்றிகளையே இவர்கள் கைப்பற்றினர். இவற்றின் பெறுமதி ரூபா பத்து இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த தேக்குமரக்குற்றிகள் மட்டக்களப்பு தொப்பிகல பகுதியை அண்மித்த கார்மலைப் பிரதேசத்திலுள்ள அரசாங்க காட்டில் சட்டவிரோமாக வெட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரக்குற்றிகள் மர ஆலை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

உழவு இயந்திரத்தை தடுத்து வைத்துள்ளதுடன், சாரதியையும் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்எம். ஷியாம் தெரிவித்தார். ஏறாவூர்ப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இம்மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

## மூன்று வாரத்தில் மருந்து...

03ஆம் பக்கத் தொடர்

பெற்றுக் கொடுப்பதற்கு உலக சுகாதார நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்: நாட்டில் மூன்று மாதங்களுக்கு குறிப்பிட்ட மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவலாம்.

எனினும் அந்த தட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து. மருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை பெருமளவு மருந்துகள் உள்ள ஆஸ்பத்திரிகளிலிருந்து மருந்து தட்டுப்பாடுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை சர்வதேச நாடுகளில் உள்ள தூதரகங்களுடன் தொடர்பு கொண்டு அங்குள்ள இலங்கையர்களின் உதவிகளை பெற்று மருந்து கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிறைவேற்று ஜனாதிபதி...

03ஆம் பக்கத் தொடர்

எனினும் அது தொடர்பில் தற்போது பீ.பீ.ஜயசுந்தர, கப்ரால், லக்ஷ்மன் ஆகியோர் மீது குற்றம் சுமத்துகின்றனர். நாட்டுக்கு இலாபம் கிடைக்கும் வகையிலேயே கடன்களை பெற்றிருக்க வேண்டும். ஆனால் தற்போது எரிபொருள், மருந்து, மருத்துவ உபகரணங்கள், உணவுப் பொருட்களுக்கான பணத்தை இவர்கள் வட்டியை செலுத்துவதற்காக பயன்படுத்தியுள்ளனர்.

நாம் இந்த நிலைமைகளை புரிந்துகொண்டதால்தான் இரண்டு வருடங்களுக்கு முன்னரே என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டோம்.

இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு கோரினோம். ஜப்பான், இந்தியா, சீனாவுடன் அப்போது பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அரசாங்கம் வேண்டுமென்றே இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. பிரதமர் நிதி முகாமைத்துவம் தொடர்பில் கதைக்கின்றார். ஏன் சர்வதேசத்துடன் செய்யும் கொடுக்கல்வாங்கலை இரண்டு வருடங்களுக்கு முன்னர் செய்யவில்லை என்று கேட்கின்றோம். இவர்கள் செய்த தவறுகளே இன்று அனைத்துக்கும் காரணமாகியுள்ளது.

நாம் 9 திட்டங்கள் தொடர்பில் தெரிவித்துள்ளோம். சர்வதேச நிதி மற்றும் சட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?, கடன் வரிகளை குறைப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளனவா? எதனையும் அரசாங்கம் செய்யவில்லை. தமக்கு வேண்டியவாறு 20 ஆவது திருத்தத்தை நீக்கி 19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதனூடாக நாங்கள் திருப்தியடையப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் அறுவருக்கு...

03ஆம் பக்கத் தொடர்

அத்துடன், பிரியந்த குமார அடித்துக் கொலை செய்யப்படும் காட்சிகள் அடங்கிய காணொளியும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வந்தது. இச்சம்பவம் தொடர்பில் 100க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்ததுடன், மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் 6 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி வரிக் குறைப்பு...

03ஆம் பக்கத் தொடர்

பற்றிய குழுவின் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பாவினால் 2022 ஏப்ரல் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இக்கூட்டத்தில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார மற்றும் நளின் பெர்னான்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நான்காவது டோஸை...

03ஆம் பக்கத் தொடர்

கட்டாயம் இல்லை எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நான்காவது டோஸை செலுத்த அரசு திட்டம் எதிர்வரும் காலத்தில் கொவிட் 19 நான்காம் கட்ட தடுப்பூசியை செலுத்துவதற்கு திட்டமிடப்படுவதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன அறிவித்துள்ளார். நேற்று முன்தினம் சுகாதார அமைச்சராக பதவியேற்ற பின், செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்விடயத்தை கூறினார். இதேவேளை, நேற்று முதல் அமுலாகும் வகையில் பொது இடங்களில் முக கவசம் அணிவது கட்டாயம் இல்லை என அவர் கூறியுள்ளார். எனினும் பொதுப் போக்குவரத்து மற்றும் உள்ளக நிகழ்வுகளில் கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும் எனவும், பொது இடங்களில் முக கவசம் அணிவது கட்டாயம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டின் தற்போதைய...

03ஆம் பக்கத் தொடர்

வீதிகளில் இறங்கி போராடினர். ஆனால் அந்தத் தீர்மானத்தை ஒருபோதும் கைவிட மாட்டோம் என்று அன்று கூறிய ஜனாதிபதி, இப்போது அந்தத் தீர்மானம் தவறானது என்று கூறுவது விந்தையானது. அதேபோன்று பாரியளவில் பணத்தை அச்சிடும் போது, பண வீக்கம் ஏற்படும் என்று சபையில் கூறப்பட்ட போதும் அவ்வாறு நடக்காது என்று மத்திய வங்கி ஆளுநர் தன்னிச்சையாக குறிப்பிட்டார். ஆனால் தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் பணம் அச்சிட்டதே இந்த நெருக்கடிக்கு காரணம் என்று தெரிவித்துள்ளார். டொலரின் பெறுமதி அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தின் தவறான தீர்மானமே காரணமாக அமைந்தது. இந்நிலையில் இந்த அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? புதிய அமைச்சரவை அமைக்கப்பட்ட இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குள் எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளன.

இப்போது மக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. நம்பிக்கையுள்ள அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றார்.

## சஹ்ரான் ஹாசிம்...

03ஆம் பக்கத் தொடர்

முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர . இந்த செய்தி தொடர்பில் நானும் அறிந்தேன். அது தொடர்பில் எனது செயலாளரிடமும் வினவினேன்.அந்த வாகனம் அரசுடைமையாக்கப்பட்ட வாகனம். சஹ்ரான் ஹாசீம் பயன்படுத்திய அந்த வாகனத்தை நான் பயன்படுத்தவில்லை. ஆனால் எனது அமைச்சின் கீழிருந்த விசேட செயலணியின் பாவனைக்கு அந்த வாகனம் வழங்கப்பட்டிருந்தது என்றார். இதன்போது எதிர்க்கட்சியினர் அவருக்கு எதிராக கூச்சலிட்டனர்.

இதன்போது எழுந்த மனுஷ நாணயக்கார எம்பி, சஹ்ரான் ஹாசீம் பயன்படுத்திய அந்த வாகனம் ஒரு நீதிமன்ற சான்றுப் பொருள்,அதனை எப்படி அமைச்சரோ அவரின் விசேட செயலணியோ பயன்படுத்த முடியும் எனக்கேள்வி எழுப்பினார்.

அதனைத்தொடர்ந்து அனுரகுமார திசாநாயக்க எம்பி சஹ்ரான் ஹாசிமுக்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெறுகின்றது. அவர் பயன்படுத்திய வாகனம் நீதிமன்ற சான்றுப்பொருளாக இருக்கும்போது எப்படி அதனை பயன்டுத்த முடியும் என்பதை தெரிவிக்க வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார்.

## இராஜாங்க அமைச்சர்களாக...

அமைச்சராக எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் புதிதாக 24 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தற்போது ...

பிரதிநிதிகள் குழு 17 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டனர்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகர் நோக்கிச் சென்ற இந்த பிரதிநிதிகள் குழுவில் மத்திய வங்கி ஆளுநர், பேராசிரியர் நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன உள்ளிட்ட நிதி அமைச்சு மற்றும் மற்றும் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

இந்நிலையிலேயே, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் நிதி அமைச்சர், அலி சப்ரி உள்ளிட்ட பிரதிநிதிகள் சந்திப்பை மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

## நிலையான தீர்வை அடைய...

(EFF) பற்றிய கலந்துரையாடல்கள் தொடர்பில் இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவிருந்த இக் கலந்துரையாடலுக்காக நிதியமைச்சர் அலிசப்ரி தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (17) வொஷிங்டன் நோக்கி பயணமாகி இருந்தனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட குழுவினரே இவ்வாறு பயணமாகினர். இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. இதில் சர்வதேச நாணய நிதியம், 03 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்குமென எதிர்ப்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க முன்னதாக நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

## எதிர்க்கட்சி வரிசையில்...

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோர் நேற்று இதனை அறிவித்தனர்.

புதிய அமைச்சர்கள் 18 பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து நேற்று ஆளும் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சித் தலைவர்களுக்கு எதிரணியில் முன்வரிசை ஒதுக்கப்பட்ட அதேவேளை புதிய அமைச்சர்களுக்கும் முன்வரிசையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## தென்னிலங்கை போராட்டங்களை...

இருந்தால் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி ஒட்டுமொத்த இலங்கையையும் ஆட்டம் காணச் செய்துள்ளது.

இந்த நெருக்கடியின் மூலவேர் தனித்து பொருளாதார பிரச்சினையன்று. இந்தத் தீவில் காலாகாலமாக, மகா வம்சப் புனைவுகளை நம்பி சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றமைக்கான விளைவுகளையே இப்போது சிங்கள மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் .

அந்த மேலாதிக்க மனோ நிலையில் தமிழர்களை வென்றுவிட்டதாக அவர்கள் குதூகலித்திருந்தாலும், உண்மையில் தோற்றுப்போனவர்கள் அவர்கள்தான் என்பதை காலம் எடுத்துரைத்திருக்கின்றது.

பொருளாதார நெருக்கடி இந்தத் தீவின் தமிழ்த் தேசத்தையும் பாதித்திருக்கின்றதுதான். அதை மறுக்க முடியாது.

சிங்கள தேசத்து ஆட்சியாளர்களால் தமிழர் தேசம் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளுக்குள்ளும் வாழ்ந்து வந்தவர்கள் நாம். ஆனாலும் இப்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களை சங்கீதக் கதிரை போன்று மாற்றுவதற்கு முயலும் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளின் பின்புலத்துடன் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நாம் ஆதரிப்பது தீர்வாகாது.

நாம் எமது முன்னைய சுய பொருளாதாரத்துக்கு திரும்புவதே தற்போதைய நெருக்கடியிலிருந்து தமிழர் தேசம் மீள்வதற்கான வழி. அதை எம்மவர்கள் செய்து கொண்டும்தான் இருக்கின்றார்கள்.

தென்னிலங்கை போராட்டக்களம் தமிழர்களுக்கு தேவையற்றது. கொழும்பு மனோநிலை உடைய தமிழர்கள், தங்களது நித்திய வாழ்வாதாரத்துக்காக சிங்களவர்களுடன் போராட்டத்தில் இணைகின்றனர். ஆனால், தமிழர்கள் திரளாக ஆதரவு தரவேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு.

ஆட்சியாளர்களை மாற்றித் தீர்வைத் தேடுவதற்குப் பதிலாக அடிப்படைக் கட்டமைப்பை மாற்றக் கோருவதுடன், மகாவம்ச புனைவுகளிலிருந்து மீளத் தயாராகும்போதே தமிழர்கள் கை கொடுப்பது காலப் பொருத்தமாக இருக்கும். இல்லாவிடின் நல்லாட்சி காலத்தில் கறிவேப்பிலையான கதையாகவே தமிழர்களின் நிலை அமையும், என்றும் தெரிவித்துள்ளார்.

## பஸ் கட்டணங்கள் 35 வீதம்...

அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் விலையேற்றம் காரணமாக தனியார் பஸ் சேவைகள் நேற்று இடைநிறுத்தப்பட்டிருந்தன. நாட்டின் பல்வேறு இடங்களில் எரிபொருள் விலையேற்றம் காரணமாக தனியார் பஸ் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வருடாந்த பஸ் கட்டண திருத்தம் என்பன அடிப்படையில் குறைந்த பஸ் கட்டணம் 40 ரூபாவரை அதிகரிக்க வேண்டுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

## டொலரின் பெறுமதி மேலும் அதிகரிப்பு...

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 260 ரூபா 78 சதம் விற்பனை பெறுமதி 271 ரூபா 52 சதமாகவும், அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 241 ரூபா 11 சதம். விற்பனை பெறுமதி 252 ரூபா 10 சதமாகவும், ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபா 58 சதம் விற்பனை பெறுமதி 2 ரூபா 68 சதமாகவும் பதிவாகியுள்ளது.

## பல தனியார் பஸ்களின்...

சிலாபத்திலும் காக்கப்பள்ளியிலும் வீதியை மறித்து போக்குவரத்து தடை செய்யப்பட்டது. நீர்கொழும்பு – கொழும்பு பிரதான வீதியில் கட்டுநாயக்க சந்தியில் வீதியை மறித்து போராட்டம் நடத்தப்பட்டது. அதேபோன்று நீர்கொழும்பிலும் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. ஆர்ப்பாட்டம் காரணமாக மலையக ரயில் சேவை, ரம்புக்கனை பிரதேசத்தில் தடைப்பட்டது.

கண்டியிலிருந்து கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் தனியார் பஸ்கள் இயங்கவில்லை. காலி வீதியில் பாணந்துறை சந்தியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அத்துடன் வடக்கிலும் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர். வர்த்தகர்கள் கடையடைப்பு செய்யவும் உத்தேசித்துள்ளனர். எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக ஹிங்குராங்கொடை, பத்தேகம, திகன, காலி, மாதம்பே, கம்பளை, கண்டி, கேகாலை, மத்துகம மற்றும் அவிசாவளை ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்த்தே நாட்டின் பல்வேறு இடங்களில் இவ்வாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## 1.7 மில். இலாபத்தை...

இந்த நிகர இலாபத்தை பதிவு செய்துள்ளதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது. அறிக்கை ஒன்றின் மூலம் இதனை தெரிவித்த விமான நிறுவனம் தனது 2021,22 நிதியாண்டில் ஊழியர்களின் செலவுகள் மற்றும் மேல்நிலைகளைக் குறைப்பது உட்பட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் இந்த நிதித் திருப்பத்தை அடைய முடிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

## மக்களின் வாழ்வாதாரத்தை...

மீண்டும் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டதையடுத்து கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பாக தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"நீண்ட காலமாக தமிழ் மக்களினால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதி என்ற அடிப்படையிலும், எம்மால் வளர்க்கப்பட்டு வருகின்ற தேசிய நல்லிணக்கம் காரணமாகவும் கடற்றொழில் அமைச்சு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், கடந்த இரண்டு வருடங்களாக நாடு முழுவதும் அடையாளப்படுத்தப்பட்ட கடற்றொழில்சார் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கும் புதிய அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

இதன்மூலம் கடற்றொழில் ஏற்றுமதிகளை விஸ்தரிப்பதன் மூலம் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சிக்கலுக்கு அடிப்படை காரணிகளில் ஒன்றான அந்நியச் செலாவணிப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் மக்களுக்கு தேவையான போஷாக்கான கடலுணவுகள் தரமானதாகவும் நியாயமான விலையில் கிடைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று எமது மக்களின் வாழ்வாதார எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் இதனை பயன்படுத்துவதே எமது திட்டமாக இருக்கின்றது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கடலட்டை வளர்ப்பு உட்பட்ட நீர்வேளாண்மை சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை மேலும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் விஸ்தரிப்பதுடன் பருத்தித்துறை, குருநகர், பேசாலை உட்பட பல இடங்களில் அமைக்கத் திட்டமிட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பது உட்பட்ட கடற்றொழில் அபிருத்திகளை மேற்கொண்டு நிலையான வாழ்வாதாரத்தை எமது மக்களுக்கு உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார்.

## ஜனாதிபதி, பிரதமர், அரசு...

சபாநாயகர் நேற்று முன்தினம் அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்து அது தொடர்பில் முக்கியமான பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதன் மூலம் அவர் சிறந்த அடித்தளத்தை மேற்கொண்டுள்ளார். அந்த வகையில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவரும் அது தொடர்பில் ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியமென்றும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன் வைத்து உரையாற்றினார். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் இது வரையில் ஜனநாயகத்தை மீறிய எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த அரசாங்கம் இடமளித்துள்ளதென்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டை குழப்பத்தில் ஆழ்த்தும் வகையில் பொறுப்பற்ற கூற்றுக்களை வெளியிட வேண்டாமென தாம் எதிர்க்கட்சித் தலைவரை கேட்டுக்கொள்வதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

நாட்டின் நிதி நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சியின் இணக்கப்பாடும் கிடைத்துள்ளது.

நாட்டின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்பட்டு வந்துள்ளனர். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் பேசப்பட்டு வருகிறது. நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வகையில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டு அது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதற்கிணங்கவே அவர் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அனைத்து கட்சியினதும் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் பேச்சுவார்த்தை ஒன்றுக்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை சபாநாயகர் சபையில் அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் பிரதமரும் விடயங்களை முன்வைத்துள்ளார். மாற்றத்திற்கான ஆரம்பம் பாராளுமன்றத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரசியலமைப்புக்கிணங்க பாராளுமன்றம் அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இத்தகைய பின்னணியில் எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கும் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பதற்கும்கூட இடமளிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும். சபையில் குழப்பகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாம் என நாம் கேட்டுக்கொள்கின்றோமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## CPC க்கு நாளாந்தம்...

அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலும் அன்றாடம் 375 மில்லியன் ரூபா அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

இந்த விலை அதிகரிப்பு காரணமாக மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரும் எனினும் இத்தகைய தீர்மானத்தை மேற்கொள்ளாவிட்டால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் மேலும் நட்டத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக எரிபொருள் வழங்குவது தடைப்படுமானால் மின் துண்டிப்புக்கான காலம் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அதன் மூலம் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரும் என்றும் அவர் தெரிவித்தார். எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் நேற்று சபையில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

எரிபொருள் விலையினை குறைப்பதற்கும் தடையின்றி எரிபொருளை இறக்குமதி செய்வதற்குமான யோசனையை எதிர்தரப்பினர் தாராளமாக சபையில் முன்வைக்கலாம்.

எரிபொருள் விநியோக கட்டமைப்பையும், மின்விநியோக கட்டமைப்பையும் சீராக முன்னெடுப்பதற்காகவே எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் புதிய எரிபொருள் விலை சூத்திரத்திற்கமைய விலைகளை நிர்ணயித்து கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்றார்.

## பாராளுமன்றம் மூலம் தீர்வுகாண....

தீர்வுகளை வழங்கும் நோக்கில் 2022 ஏப்ரல் 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் நடைபெற்ற பாராளுமன்ற விவாதங்களில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவை தொடர்பில் ஒரு சாதகமான தீர்வை எட்ட முடியாமல் போனதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது நிலவும் நெருக்கடி நிலைமையை கட்டுப்படுத்தும் முயற்சியாக பொதுமக்கள் எதிர்பார்க்கும் நலன்களுக்காக முன்னுரிமை வழங்குமாறு சகல தரப்பினரிடமும் கோரிய அவர், அரசியலமைப்பு மற்றும் சட்டத்தைத் திருத்துதல், அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் அல்லது அரசாங்க ஊழியர்களினால் சட்டவிரோதமாக சம்பாதித்து வெளிநாட்டு வங்கி அல்லது நிதி நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்டிருப்பதாக வெளியாகும் சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கு ஏதுவான வகையில் சட்டங்களைத் திருத்தல் போன்ற பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 19ஐ அமுல் படுத்துவதே...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் அன்றாடம் மணிக்கணக்கில் வரிசையில் காத்திருக்க வேண்டிய வலியை அறிந்து, இந்த நிலையைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை ஒப்புக் கொள்கிறோம். 24 மணி நேரத்துக்கு தீர்வு கிடைக்காவிட்டாலும், உங்களை இனிமேலும் நாங்கள் வரிசையில் காத்திருக்க வைக்க மாட்டோம் என்பதை நினைவில் கொள்ளுங்களென்றும் பிரதமர் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகரின் விசேட அறிவித்தலையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் இந்த சபையின் உறுப்பினர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். நமது நாட்டின் வரலாற்றில் நீண்ட காலமாக எதிர்கொண்ட பொருளாதாரசவால்தற்போது மிகவும் கடினமான கட்டத்தை எட்டியுள்ளது. ஒரு அரசு தன் மக்களுக்கு ஒரு போதும் மனமுவந்து கஷ்டங்களை ஏற்படுத்தாது. ஆனால் இந்நாட்டு மக்கள் இன்று பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிவாயு நெருக்கடி ஆகியவை நம் கண்களுக்கு புலப்படும் சிரமங்களாகும். இதன் காரணமாக இன்று மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நான் அறிவேன்.

இந்த நெருக்கடியை சமாளிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது. மக்கள் எம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டை உண்மையாக நேசிப்பவர் யார் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எமது பொறுப்புகளில் இருந்து விடுபட முடியாது, இந்த நெருக்கடியை போக்குவதற்கான திட்டங்களை ஒவ்வொன்றாக முன்வைக்க வேண்டும்.

எமது அரசியல் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு முன், நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். எனவே பாரபட்சமின்றி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் கைகோர்க்குமாறு எதிர்க்கட்சியினரை மனதார அழைக்கின்றோம். அந்த அழைப்பு இன்றும் செல்லுபடியாகும் என்பதை நினைவூட்டுகின்றேன்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். அவர்களிடமிருந்து நல்ல பதில் கிடைத்து வருகிறது. இந்த பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு தேவையான ஆதரவை எங்கள் நட்பு நாடுகள் எமக்கு வழங்கி வருகின்றன.


நிதியமைச்சர், நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் நாட்டுக்கான தமது பொறுப்புகளையும் கடமைகளையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி வருகின்றனர். ஆனால் இவ்வாறானதொரு சூழ்நிலையில் குறுகிய காலத்தில் நிலைமையை நிர்வகிப்பது குறித்தும், நீண்டகாலத்தில் நாட்டில் இவ்வாறான நெருக்கடிகள் மீண்டும் ஏற்படாதவாறு உறுதியான அடித்தளத்தை அமைப்பது குறித்தும் நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். அதனால்தான் எதிர்ப்புக்கு அப்பாற்பட்ட தலையீடு தேவை என்பதை நான் முன்பே உங்களுக்கு நினைவூட்டினேன்.

பேச்சுவார்த்தை மூலம் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும். முன்னதாக காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுக்களை கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன். அவர்களின் பெறுமதியான யோசனைகளை எடுத்து தேவையான தலையீடுகளை செய்ய முன்வந்தோம் என்பதை நினைவுபடுத்த வேண்டும்.

நீண்டகால மின்வெட்டுக்கான காரணங்களில் ஒன்று, சரியான நேரத்தில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படாமையாகும். சிலர் வேண்டுமென்றே புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அடுத்த படியைத் தவறவிட்டனர். இப்போது அந்த பழியை கடந்த காலத்தின் மீது சுமத்துவதில் அர்த்தமில்லை. அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மின் உற்பத்தி நிலையங்கள் எரிபொருள் பற்றாக்குறையை தீர்த்து வருவதாலும், மத்திய மலைநாட்டில் தற்போது மழை பெய்து வருவதாலும் இந்த பிரச்சினையை மிக விரைவாக தீர்க்க முடியும்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

# இலங்கை வங்கி

## இலங்கை வங்கியின் மினுவன்கொடை கிளையை மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது.

### உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- மாடிகளற்ற கட்டடம் எனின் தரைப் பரப்பு குறைந்தபட்சம் 6,600 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். கட்டடமானது இரு மாடிகளைக் கொண்டிருப்பின் கீழ்த் தளமானது குறைந்தது 4,600 சதுர அடிகளாக இருத்தல் வேண்டும். மீதமுள்ள பகுதி மேல் மாடியில் இருக்க வேண்டும்.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 60 அடிகள் கொண்டதாக நகர எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி அளவிலான அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 4 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம் என்பன வங்கிக்கு பொருத்தமான விதத்தில் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க குறைந்தபட்சம் 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று பொருத்தமான உயர்வான இடத்தில் வைத்திருக்க வேண்டும்.
- கட்டடத்தின் உள்ளே ஆண், பெண் என்று வெவ்வேறாக பயன்படுத்தக் கூடிய குறைந்தபட்சம் 03 கழிப்பறைகள் இருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிகமாக ஒரு கழிப்பறை கட்டடத்தின் வெளிப்புறம் இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைக்கு தரையோடு பதித்து இருத்தல் வேண்டும். அத்துடன் கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு கனரக இரும்பு கிறில் இடப்பட்டு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள் அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் திட்ட வரைபு, அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகளோடு எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(மேல் மாகாணம் - வடக்கு),
இலங்கை வங்கி,
2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்
கொள்ளுபிட்டிய.
தொலைபேசி : 011 238 1366 / 011 586 5151
தொலைநகல் : 011 232 6830
மின்னஞ்சல் : bocwpn@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பயன்படுத்திய தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொழும்பில் (மருதானை) வங்கிக்கு சொந்தமானது விற்பனைக்கு உள்ளது. மேலதிக ஆய்வுக்கு 0766622833 என்ற எண்ணிற்கு அழைக்கவும்

ஒரு வங்கிக்கு சொந்தமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் இருப்பு, 20KVA ஜெனரேட்டர் உட்பட (மிகவும் நல்ல நிலையில் உள்ளது) காத்தான்குடி டவுனில் விற்பனைக்கு உள்ளது. ஆய்வுக்கு 0766622833 என்ற எண்ணிற்கு அழைக்கவும்

திகதி 18.04.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4736
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,819,180.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 0 3 5 6 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,021,988.00

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0045
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,756,520.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 49 52 53 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,708,342.20

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 766
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,316,880.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 15 41 53 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,689,532.80

**23+ Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1084
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,284,680.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 247,611,054.00
B 04 11 46 49 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## Providing Network Administration and Hardware support for SLTDA

**Contract No.: SLTDA/ICT/NCB/NW Admin & HW Support/2022/22**

1. இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்காக வலையமைப்பு நிருவாகம் மற்றும் வன்பொருள் பங்களிப்பை வழங்குவதற்காக சேவை வழங்குநரொருவரை வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை அழைக்கின்றார்.
2. சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிகரான வேலையில் ஐந்து (05) வருட அனுபவத்தை வியாபார பதிவு செய்தலுடன் கொண்டிருத்தல் வேண்டும்.
3. 2022 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது ஒன்-லையின் (zoom meeting) மூலமாக நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்காக கோரிக்கையொன்றை amilan@srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
4. 2022 ஏப்ரல் 20 ஆம் திகதியிலிருந்து 2022 மே 11 ஆம் திகதி வரையும் https://sltda.gov.lk/tender என்ற இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர் பதிவிறக்கம் செய்யலாம். மீளளிக்கப்படாத கட்டணமான 5,000 ரூபாவானது இலங்கை வங்கியின் கூட்டுரு கிளையின் 7119413 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். **(குறிப்பு: பணவைப்பு துண்டில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என வைப்பாளரின் விபரங்கள் மற்றும் நோக்கமானது பூரணப்படுத்தல் வேண்டுமென்பதுடன் மேற்கூறப்பட்ட பணவைப்பு துண்டானது விலைமனுவுடன் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன் ஏனைய பணக்கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படமாட்டாது)**
5. 2022 மே 11 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரிக்கு நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Providing Network Administration & Hardware Support for SLTDA"** என எழுதப்படல் வேண்டும்.
6. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் அவைகளை பெறுகைப் பிரிவில் (4 ஆவது மாடி) மூடிய பின்னர், கொழும்பு-03, காலி வீதி, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் இரண்டு இலட்சம் (200,000 இ.ரூபா) இலங்கை ரூபா பெறுமதியான விலைமனு உத்தரவாதத்துடன் விலைமனுக்களின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இருபத்தெட்டு (28) நாட்களுக்கு குறையாத தன்மையில் இருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து பெற்று [தொடர்பு இல.: 011 2426800 (நீடிப்பு 305, 277), மின்னஞ்சல் முகவரி: amilam@srilanka.travel ] விலைமனுக்கோரல் ஆவணங்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையில் பரீட்சிக்கலாம். இணையதளம்: https://sltda.gov.lk/tender.
10. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களுக்கமைவாக மற்றும் அதன் பின்னரான வர்த்தமானி அறிவித்தல்களின் (பிசிஏ 3 படிவம்) பிரகாரம் பதிவு செய்தல் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. சுற்றுலாத்துறை மற்றும் சிவில் விமான சேவைகள் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியரொருவர் அல்லது கம்பனியொன்றின் மற்றும்/அல்லது அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனமொன்றின் நெருங்கிய குடும்ப உறைவைக் கொண்டுள்ள தனிநபரொருவர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை இழந்து விடுவார்.
12. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் கொண்டுள்ளதுடன் விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக வளமுள்ள விலைமனுதாரர்களுக்கேற்படும் ஆகுசெலவுகள் மற்றும் எந்தவொரு செலவினங்களுக்கும் பொறுப்பேற்கமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு-03.**

மருந்தாக்கல்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

SPMC

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் - (ICB)

**கேள்வி இல: SPMC/02/2022 - 2022 ஜூன் 01ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

## மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2022 ஜூன் 01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | அளவு (KG) | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP (Compacted) | 9,000.00 | 20,000.00 |
| 2 | Ascorbic Acid BP | 6,000.00 | 4,000.00 |
| 3 | Atorvastatin Calcium IP | 500.00 | 5,000.00 |
| 4 | Benzhexol Hydrochloride BP | 100.00 | 1,000.00 |
| 5 | Carbamazepine BP | 4,000.00 | 20,000.00 |
| 6 | Clopidogrel Bisulphate USP | 2,000.00 | 8,000.00 |
| 7 | Domperidone Maleate BP | 500.00 | 2,500.00 |
| 8 | Enalapril Maleate USP | 200.00 | 3,000.00 |
| 9 | Frusemide BP | 1,500.00 | 5,000.00 |
| 10 | Gabapentin USP | 1,000.00 | 4,000.00 |
| 11 | Gliclazide BP | 6,000.00 | 30,000.00 |
| 12 | Losartan Potassium BP | 7,000.00 | 25,000.00 |
| 13 | Metformin Hydrochloride BP | 9,000.00 | 5,000.00 |
| 14 | Phenoxymethyl penicillin Potassium (Compacted) BP | 2,000.00 | 6,000.00 |
| 15 | Spironolactone USP | 250.00 | 5,000.00 |
| 16 | Theophylline Anhydrous USP/BP | 500.00 | 1,000.00 |
| 17 | Ammonio methacrylate Copolymer (Type B) USNF | 700.00 | 4,000.00 |
| 18 | Calcium Sulphate Dihydrate BP | 500.00 | 500.00 |
| 19 | Di Basic Calcium Phosphate (Dihydrate) USP | 2,000.00 | 500.00 |
| 20 | Colloidal Silicon Dioxide USP/USNF | 540.00 | 1,000.00 |
| 21 | DC Lactose (Lactose Anhydrous USNF/ USP) | 6,000.00 | 3,500.00 |
| 22 | Hydroxypropyl Cellulose-L JP | 500.00 | 2,500.00 |
| 23 | Lactose Monohydrate BP /USP (200 Mesh) | 50,000.00 | 8,000.00 |
| 24 | Magnesium Stearate BP | 500.00 | 500.00 |
| 25 | Maize Starch BP | 54,000.00 | 4,000.00 |
| 26 | Microcrystalline Cellulose USNF/ BP | 12,000.00 | 2,500.00 |
| 27 | Microcrystalline Cellulose USNF/ PH EUR/JP (PH 200 LM) | 6,000.00 | 2,500.00 |
| 28 | Povidone K-30 USP/ BP | 500.00 | 500.00 |
| 29 | Pre-gelatinized Maize Starch | 2,500.00 | 500.00 |
| 30 | Purified Talc BP | 5,000.00 | 500.00 |
| 31 | Sodium Starch Glycolate BP/USNF | 5,000.00 | 2,500.00 |
| 32 | Stearic Acid BP (Grade 50) | 200.00 | 500.00 |
| 33 | Tartaric Acid BP | 200.00 | 500.00 |
| 34 | Titanium Dioxide BP | 600.00 | 500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2022 ஏப்ரல் 20ஆம் திகதி முதல் 2022 மே 31ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீள் செலுத்தப்படாத மேல் கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்.
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 2623298)
   ''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)
   வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் பெறுமதி/ பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**

**தொலைபேசி இல. : (00)94-11-2635353/(00)94-11-2637574/(00)-94-11-2623298**
**மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk**
**இணையதளம் : www.spmclanka.lk**
**தொலைநகல் இல. : (00) 94-11-2634771, 2626621**

LOOKING FOR TALENT?



OBSERVER JOBS "We change your world"
SRI LANKA'S LARGEST ONLINE DATABASE
www.observerjobs.lk
To connect with us
0777 270012 / 0112 429314
email - careers@observerjobs.lk
LAKE HOUSE Sunday Observer OBSERVER JOBS

# சர்வதேச செய்திகள்

## நிதிப் பற்றாக்குறை: பாக். மின் விநியோகம் பாதிப்பு



மின் உற்பத்திக்கு நிலக்கரி, இயற்கை எரிவாயு வாங்க போதிய நிதி இல்லாததால் பாகிஸ்தான் அரசு, வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்கான மின் விநியோகத்தை நிறுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன், ரஷ்யா போர் விவகாரத்தால் ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தி விநியோக குறைபாடுகளால் கடந்த 9 மாதங்களில் மட்டும் பாகிஸ்தானின் எரிசக்தி கொள்முதல் செலவு 15 பில்லியன் டொலர் அளவு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி, இயற்கை எரிவாயு என மின் உற்பத்திக்கு தேவையான பொருட்களை வாங்கும் அளவு போதிய நிதியின்மையால் 3 ஆயிரத்து 500 மெகாவாட் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஒப்லைன் உற்பத்தி முறையிலும் இதே குளறுபடிகள் நீடிப்பதாக புதிய அமைச்சரவையின் நிதி அமைச்சர் மிப்தா இஸ்மயில் தெரிவித்துள்ளார்.

ஒட்டு மொத்த உற்பத்தியில் சுமார் 7 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி தடைபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## காசா மீது இஸ்ரேலிய படை வான் தாக்குதல்



இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று காசா பகுதி மீது தாக்குதல் நடத்தியுள்ளது. காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் ஆயுத உற்பத்தித் தளம் ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் பாதிப்புகள் பற்றி உறுதி செய்யப்படவில்லை என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நிலத்தில் இருந்து வானைத் தாக்கும் ஏவுகணை மூலம் பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

முற்றுகையில் இருக்கும் காசாவில் இருந்து கடந்த திங்கட்கிழமை தெற்கு இஸ்ரேல் மீது வீசப்பட்ட ரொக்கெட் குண்டு ஒன்று இடைமறிக்கப்பட்ட நிலையிலேயே இஸ்ரேலின் இந்த வான் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்தின் அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்றத்திற்கு மத்தியில் கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற முதல் தாக்குதலாக இது உள்ளது.

## ஆப்கான் அரசியல் நெருக்கடி: வங்கித்துறை பெரிதும் பாதிப்பு



ஆப்கானிஸ்தானின் ஆட்சி பொறுப்பைத் தலிபான்கள் ஏற்றது முதல் அரசியல் நெருக்கடி நீடித்து வருவதால் தொழில்கள் நிறுத்தப்பட்டுள்ளதோடு நாட்டின் வங்கி மற்றும் தனியார் துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

வர்த்தக நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளதால் பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் சராசரியாக பாதிக்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணிநீக்கம் செய்துள்ளன, இதன் விளைவாக நாட்டில் வேலையின்மை அதிகரிக்கும் நிலை குறித்த கவலைகள் எழுந்துள்ளன என்றும் அவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு உள்ளீடுகளும் விலை உயர்ந்துள்ளன. விநியோகச் சங்கிலி சீர்குலைந்துள்ளன. தற்போது எல்லைகள் மூடப்பட்டுள்ளதால் வெளிநாட்டு நாணய மதிப்பு பெரிதும் அதிகரித்துள்ளன.

பொருட்களின் விலைகளும் கடுமையாக அதிகரித்திருப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாத பெரும் சிரமத்துக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

## ஆப்கான் பாடசாலையில் தாக்குதல்: அறுவர் பலி



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் ஆண்கள் பாடசாலை ஒன்றில் நேற்று இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகரின் மேற்கு பகுதியில் உள்ள அப்துல் ரஹீம் ஷஹீத் உயர் பாடசாலைக்கு வெளியில் இரு வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாக காபுல் பொலிஸ் பேச்சாளர் காலித் சத்ரான் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் காலை வகுப்பை முடித்து வெளியேறும்போதும் இந்த குண்டுகள் வெடித்ததாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் ஷியா ஹசரா சமூகத்தினர் பெரும்பான்மையாக உள்ளனர். மத ரீதியான சிறுபான்மையினராக உள்ள இவர்களை இலக்கு வைத்து ஐ.எஸ் குழு கடந்த காலத்தில் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தத் தாக்குதல் தொடர்பில் எந்தத் தரப்பும் உடன் பொறுப்பேற்கவில்லை. ஆப்கானில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறியது மற்றும் கடும் குளிர்கால மாதங்களுக்கு மத்தியில் ஆப்கானில் அண்மைக் காலத்தில் வன்முறைகள் குறைந்து காணப்படுகின்றன.

கடந்த ஒகஸ்டில் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் பாதுகாப்பை பலப்படுத்தியதாக தலிபான்கள் கூறுகின்றபோதும், கிளர்ச்சியாளர்களின் செயற்பாடுகள் அங்கு தொடர்ந்து இருந்து வருவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக இடம்பெற்று வரும் தாக்குதல்களுக்கு ஐ.எஸ் குழுவே பொறுப்பேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கிழக்கு உக்ரைன்:

## டொன்பாஸ் போரை ஆரம்பித்தது ரஷ்யா



நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட உக்ரைன் மீதான ரஷ்யாவின் இரண்டாம் கட்ட போர் நடவடிக்கையான 'டொன்பாஸ் போர்' ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

கிழக்கு உக்ரைனில் ஒட்டுமொத்த முன்னரங்கு பகுதிகளிலும் உக்ரைனிய தற்காப்பு அரண்களை முறியடிக்கும் முயற்சியை ரஷ்யப் படை நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஒட்டுமொத்த ரஷ்ய இராணுவத்தின் பெரும் பகுதி இந்தத் தாக்குதலில் அவதானம் செலுத்தியுள்ளது' என்று வீடியோ மூலம் உரை நிகழ்த்திய செலென்ஸ்கி தெரிவித்தார். 'எத்தனை ரஷ்ய துருப்புகள் அனுப்பப்பட்டபோதும் கவலையில்லை. நாம் போராடுவோம். நாம் எம்மை பாதுகாப்போம்' என்றார்.

இந்த தாக்குதலுக்கு உக்ரைனியர்கள் தாக்குப்பிடிப்பார்கள் என்று உக்ரைனிய இராணுவ தலைமை பணியாளர் அன்ட்ரி யெர்மக் உறுதி அளித்தார். 'எமது இராணுவம் வலுவாக உள்ளது என்று நாம் நம்புகிறோம்' என்று அவர் கூறினார்.

டொனட்ஸ்க், லுஹான்ஸ்க், கார்கிவ் வட்டாரங்களில் ரஷ்யப் படையினர் தங்கள் தற்காப்பை முறியடிக்க முயன்றதாக உக்ரைனின் தேசியப் பாதுகாப்பு மன்றம் கூறியது. சில நகரங்களில் ரஷ்யப் படையினர் நடத்திய தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டதாக உக்ரைனிய அதிகாரிகள் கூறினர்.

வடக்கில் தலைநகர் கியேவில் இருந்து கடந்த மார்ச் மாதம் பின்வாங்கிய உக்ரைனியப் படை, டொன்பாஸ் என்று அழைக்கப்படும் இரு மாகாணங்களில் தரைவழி தாக்குதல்களை நடத்தும் திட்டமாக படைகளை மீண்டும் குவிக்க ஆரம்பித்தது. தலைநகர் உட்பட ஏனைய இலக்குகள் மீது தொலைதூர தாக்குதலையே ரஷ்யா நடத்தி வருகிறது.

இந்த புதிய மோதல்கள் பற்றி ரஷ்ய பாதுகாப்பு அமைச்சில் இருந்து உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

## சீனாவின் வளர்ச்சிக்கு பெரும் அச்சுறுத்தல்



கொவிட் தொற்றை முழுமையாக துடைத்தொழிக்கும் சீனாவின் கொள்கை அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இலக்கு திசைமாறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அங்கு ஷங்ஹாய் நகர் தொடர்ந்து முடக்கப்பட்டிருப்பதோடு விநியோகச் சங்கிலிகள் முடங்கி, துறைமுகங்கள் தாமதத்தை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக இருக்கும் சீனாவில் ஏற்கனவே கடந்த ஆண்டின் கடைசி பாதியில் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது.

சொத்து சந்தை சரிவு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டுக்காக இந்த தசாப்தத்தின் மிகக் குறைவான வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி இலக்கை முன்னணி கொள்கை வகுப்பாளர்கள் நிர்ணயித்துள்ளனர்.

## ஆப்கான் வானொலி நிலையங்கள் பூட்டு



கடும் பொருளாதார சவாலுக்கு முகம்கொடுத்திருக்கும் ஆப்கானிஸ்தானில் புகழ்பெற்ற மேலும் இரு வானொலி நிலையங்கள் தமது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளன.

தென்கிழக்கு மாகாணமான பக்தியாவில் 11 ஆண்டுகளாக ஒலிபரப்பாகும் ரேடியோ பக்தியா காக் மற்றும் வடக்கு மாகாணமான பர்யாப்பில் 10 ஆண்டுகளாக ஒலிபரப்பாகும் ரேடியோ மைமானா ஆகிய வானொலி சேவைகளே நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த இரு நிலையங்களும் கடந்த வாரம் தனது செயற்பாட்டை நிறுத்தின. ஆப்கானில் முன்னாள் அரசு வீழ்ந்தது தொடக்கம் பல டஜன் ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டிருப்பதாக தரவுகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

## கொவிட்: ஷங்ஹாயில் மேலும் எழுவர் பலி



சீனாவின் ஷங்ஹாயில் 24 மணி நேர இடைவெளியில் மேலும் 7 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இது கடந்த திங்கட்கிழமை பதிவான உயிரிழப்பு எண்ணிக்கையை விடவும் 4 பேர் அதிகமாகும். சீனாவின் அண்மைய வைரஸ் பரவல் மையமாக ஷங்ஹாய் உருவெடுத்துள்ளது.

உற்பத்தியையும் வர்த்தக நடவடிக்கைகளையும் படிப்படியாகத் ஆரம்பிக்கத் திட்டமிடும் வேளையில் ஷங்ஹாயில் நோய்த்தொற்றால் மரணம் நேர்ந்துள்ளது.

வைரஸ் பரவலால் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவியை அதிகரிக்கப் போவதாகச் சீன மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடுமையான கட்டுப்பாடுகளால் பொருளாதார பாதிப்பு மோசமாகாமல் தடுக்க அது உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக உணவு பற்றாக்குறை: தீர்வுகாண முக்கிய மாநாடு



உக்ரைன்–ரஷ்ய போரினால் உலக அளவில் உணவுப் பற்றாக்குறை மோசமடைந்துள்ளது. அதற்குத் தீர்வுகாணும் வழிகளை ஆராய சர்வதேச நிதியமைச்சர்கள் இந்த வாரம் சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்க நிதியமைச்சர் ஜெனட் யெலென் அந்த முயற்சியை வழிநடத்துவார். தலைநகர் வொஷிங்டனில் பெரிய அளவிலான பொருளாதார சந்திப்புகள் இடம்பெறுகின்றன.

அதில் உலகத் தலைவர்கள், முதலீட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொள்கின்றனர்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கடுமையாகிவரும் உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினை பற்றிக் கலந்தாலோசிக்க அமெரிக்க நிதியமைச்சர் முனைவார்.

தற்போது நடைபெறும் பூசலால் வளரும் நாடுகளில் உணவுப் பாதுகாப்பின்மை நிலவுகிறது. அது கவலையளிப்பதாக அமெரிக்க நிதியமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

உக்ரைன்–ரஷ்யப் போர் சர்வதேச அளவில் உணவு, எரிசக்தி, நிதிச் சந்தைகளில் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்துவதாக உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் எச்சரித்துள்ளன.

வளரும் நாடுகளில் வாழும் பில்லியன் கணக்கான மக்கள் அதனால் பாதிக்கப்படுவர் என்று அமைப்புகள் கூறின.

## அமெ. முகக்கவச கட்டுப்பாடு ரத்து



அமெரிக்காவில் பொது போக்குவரத்தின் போது முகக்கவசம் அணியும் உத்தரவை புளோரிடா மாவட்ட நீதிமன்றம் ரத்து செய்தது.

பெருகி வரும் கொரோனா பரவலை கடுப்படுத்த பொது போக்குவரத்தின் போது மக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்ற உத்தரவை மே 3ஆம் திகதி வரை அமெரிக்க நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணையம் நீடித்தது.

இதுகுறித்து விசாரணை நடத்திய புளோரிடா மாவட்ட நீதிமன்றம் முகக்கவசம் கட்டாய உத்தரவை ரத்து செய்தது. மேலும் மக்கள் முகக்கவசம் அணிய உத்தரவிட அமெரிக்க நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆணையத்தின் எந்த சட்ட அதிகாரமும் இல்லை என உத்தரவிட்டது.

## தென்னாபிரிக்காவில் தேசிய அனர்த்த நிலை



தென்னாபிரிக்காவில் தேசிய அனர்த்த நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

க்வாசாலு நடால் மாநிலம் வெள்ளத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி சிரில் ரமபோசா பேரிடர் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடுமையான வெள்ளம், நிலச்சரிவுகளில் சிக்கி 440 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் 10க்கும் அதிகமானோரைக் காணவில்லை.

தென்னாபிரிக்க தேசிய பாதுகாப்பு படையினர் 10,000 பேர் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மருத்துவ உதவிகளைச் செய்யவிருக்கும் படையினர், மீட்பு, நிவாரணப் பணிகளுக்காக ஹெலிகொப்டர்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

தென்னாபிரிக்காவில், வெள்ளத்தால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். பல இடங்களில் மின்சாரமும் குடிநீர் வசதியும் இல்லை. ஆபிரிக்காவின் சுறுசுறுப்பான டர்பன் துறைமுகத்தில் பணிகள் தடைபட்டுள்ளன.

# நகர்வலம்



## அமைச்சர் நஸீர் அஹமட் மீது மு.கா நடவடிக்கை எடுக்கும்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு



கட்சியின் கட்டுப்பாட்டை மீண்டுமொரு தடவை மீறிக் கொண்டு அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட நஸீர் அஹமட் மீது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடம் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக நஸீர் அஹமட் உட்பட உறுப்பினர்கள் நால்வரையும் கட்சியில் அவர்கள் வகித்த பதவிகளிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், அமைச்சு பதவியை பெற்றுக்கொண்டமையானது மிகவும் அசிங்கமானது.

கட்சியின் உச்சபீடம் எதிர்வரும் வெள்ளிகிழமை (22) உத்தியோகபூர்வமாக ஒன்றுகூடி, நஸீர் அஹமட்டுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

**புதிய அமைச்சரவையின் நோக்கம்**

## பொருளாதாரத்தை கட்டியெழுப்பி மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதாகும்

### நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத்



பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது, புதிய உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது மற்றும் ஏற்றுமதி செயல்முறையை வலுப்படுத்துவது புதிய அமைச்சரவையின் நோக்கமாகும். இதில் நெடுஞ்சாலைத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எத்தனை சவால்கள் வந்தாலும் வளர்ச்சியையும் முதலீட்டையும் கைவிட முடியாது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் வெற்றியடைய அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன் என புதிய நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

பத்தரமுல்லை, கொஸ்வத்தையில் அமைந்துள்ள மக நெகும மஹமெதுர வளாகத்தில் அமைந்துள்ள அமைச்சின் காரியாலயத்தில் (18) கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் ஊழியர்களிடம் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில் ஒரு அரசாங்கமாக நாங்கள் பல பெரிய சவால்களை எதிர்கொள்கிறோம். அரசாங்கத்தின் கவனம் தற்போது நாட்டை முன்னோக்கி வழிநடத்துவதும் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதாகும், மேலும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உழைக்க வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் இது போன்ற ஒரு முக்கியமான தருணத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சுப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தமைக்காக ஜனாதிபதிக்கும் அவர் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

## வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள்

*(கல்நேவ தினகரன் விசேட நிருபர் )*

புனித ரமழானை முன்னிட்டு நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வாழ்வாதாரத்தை இழந்துள்ள 100 குடும்பங்களுக்கு பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதாக நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் ஜே.எச்.எம்.ஹஸ்ரான் தெரிவித்தார்.

நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்காக சென்றுள்ள அங்கத்தவர்களின் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பணத் தொகையினால் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**தென் மாகாணம் வருகின்ற...**

## சுற்றுலா பயணிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்க திட்டம்

### மாத்தறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்

*(மாத்தறை தினகரன் நிருபர்)*

மாத்தறை மாவட்டத்திற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு உரிய பாதுகாப்புகளை வழங்க விஷேட திட்டங்களை தாம் மேற்கொண்டுள்ளதாக மாத்தறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் நிஷாந்த சொய்ஸா தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் மிரிஸ்ஸ, கம்புருகமுவ, தெனியாய, திக்குவல்லை, மாத்தறை–பொல்ஹேன, தெவிநுவர போன்ற இடங்களில் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் வீடுகளிலும் ஹோட்டல்களிலும் தங்கியுள்ளனர். சிலர் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் பாதுகாப்பைக்கருத்திற் கொண்டு சகல பொலிஸ் நிலையங்களிலும் விஷேட பொலிஸ் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மிரிஸ்ஸ பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளின் கெமரா, பணப்பை என்பன வழிப்பறிக் கொள்ளையர்களினால் அண்மையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புதிய அமைச்சரவையில்; தென் மாகாணத்திற்கு 3 அமைச்சரவை அந்தஸ்து

### ரமேஷ் பதிரன, காஞ்சன விஜேசேக்கரவுக்கும் அமைச்சு பதவிகள்



*(வெலிகம தினகரன் நிருபர்)*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய அமைச்சரவை (18) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டன. இவர்களுள் தென் மாகாணத்தைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளன.

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ் பதிரன கல்வி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராகவும், மொஹான் பிரியதர்ஷன சில்வா நீர் வழங்கல் அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தற்போது கல்வி அமைச்சராக பதவியேற்றுள்ள ரமேஷ் பதிரன முன்னாள் மறைந்த கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பதிரனவின் புதல்வர் ஆவார்.

மேலும் மின்சக்தி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட காஞ்சன விஜயசேகர முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜயசேகரவின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜயசேகர சுகவீனமுற்ற நிலையில் தமது மாத்தறை இல்லத்தில் வசித்து வருகிறார்.

முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டளஸ் அழகப்பெரும புதிய அமைச்சரவையில் இடம்பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

## பேருவளை பிராந்திய ராபிதாவின் வருடாந்த இப்தார் நிகழ்வும் ஸகாத் நூல் அறிமுகமும்







ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயம் ஒழுங்கு செய்த அங்கத்தினர்களுக்கான வருடாந்த இப்தார் நிகழ்வும் ஸகாத் நடைமுறை வழிகாட்டல் நூல் அறிமுகமும் ஜாமியா நளீமிய்யா கலாபீட ADRT மாநாட்டு மண்டபத்தில் (17) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



பேருவளை வலய அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் ராபிதாவின் உயர்மட்ட ஆலோசனை சபை சார்பாக உஸ்தாத் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் , அஷ்ஷெய்க் அப்துல் ராஸிக் மற்றும் ராபிததுந் நளீமிய்யீன் இடைக்கால குழு சார்பாக தலைவர் அஷ்ஷெய்க் ஷாகீர், உப தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வான் உவைஸ் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதில் முக்கிய நிகழ்வாக ஸகாத் நடைமுறை வழிகாட்டல் நூல் அறிமுகத்தை ராபிதாவின் உயர் மட்ட ஆலோசகர் அஷ்ஷெய்க் அப்துல் ராஸிக் நிகழ்த்தினார்.

மேலும் முக்கிய நிகழ்வாக நளீம் ஹாஜியார் பற்றிய நினைவூட்டல் நிகழ்வும் மற்றும் பேருவளை வலய ராபிதாவின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலும் நடைபெற்றதோடு இறுதியில் இப்தார் நிகழ்வுடன் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. மிகவும் நீண்டகாலத்தின் பின் இவ்வாறானதொரு ஆரோக்கியமான அருள் பொருந்திய ஒன்றுகூடலை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களுக்கு கலந்து கொண்ட உறுப்பினர்கள் நன்றிகளை தெரிவித்துக்கொண்டதாக அஷ்ஷெய்க் முப்தி முர்ஸி தெரிவித்தார்.





தெஹிவளை கல்கிசை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஒழுங்கு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு தெஹிவளை களுபோவில முகையத்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் ஹாஜி இஸ்மாயில் தலைமையில் (17) நடைபெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் பரிபாலன சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம். (படங்கள்: தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)

## கூடிய விலையில் பெற்றோல் விற்பனை; சந்தேக நபர் கைது

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*

எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து பெற்றோலினை குறைந்த விலைக்குப்பெற்று கூடுதல் விலைக்கு விற்பனை செய்து கொண்டிருந்த சந்தேக நபரொருவரை அம்பலாந்தோட்டை பொலிஸார் (19) கைது செய்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த 800 லீற்றர் பெற்றோலும் கைப்பற்றப்பட்டுள்ளது. அம்பலாந்தோட்டை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து பெற்றோலினை குறைந்த விலைக்குப் பெற்று சந்தேகநபர் 750 மில்லி லீற்றர் போத்தல் பெற்றோலினை 270 ரூபாவிற்கு விற்பனை செய்து கொண்டிருந்த போதே மீதமாக இருந்த 800 லீற்றர் பெற்றோலுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



2022 ஆம் ஆண்டின் தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிக்கும் தேசிய நிகழ்விற்கு அமைவாக ஹம்பாந்தோட்டை வலயத்திலுள்ள தெஹிகஹலந்த மகா வித்தியாலயம் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ முன்னோடி ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் மாணவர்கள் கலை நிகழ்சிகளுடன் மலர் கொடுத்து வரவேற்கப்படுவதைப்படத்தில் காணலாம். (படங்கள்: ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்)

## மோ. சைக்கிள் திருடிய நபர் கைது

*அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்*

புத்தாண்டு விழாவின் போது இரண்டு இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதிமிக்க மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடியதாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய இரு இளைஞர்களை (17) கைது செய்துள்ளதாக மொரகொட பொலிசார் தெரிவித்தனர்.

லவுநேறுவ மற்றும் கதுபாகம பகுதிகளைச் சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க இளைஞர்களையே கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். லவுநேறுவ பாடசாலை மைதானத்தில் கடந்த (16) இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விழாவிற்கு தனது தாயுடன் வந்திருந்த இளைஞனின் மோட்டார் சைக்கிளை சந்தேக நபர்களான இளைஞர்கள் திருடி இருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளை திருடியதாக கூறப்படும் இளைஞன் ஒருவரை கைது செய்து மேற்கொண்ட விசாரணையின் போதே மற்றைய இளைஞனை கைது செய்ய முடிந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

மொரகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

# எதிர்காலத்தில் கால் பதிக்கும் நடைமுறைசார் பட்டதாரி

## (வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவை ஒட்டிய பதிவு)

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா ஏப்ரல் 20 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறுகிறது. அறிவு மற்றும் திறனில் முழுமை பெற்ற தொழில் பயிற்சியுடன் இளைஞர்களை நவீன உலகுக்கு பொருந்துகின்ற சிறந்த ஆளுமையுடைய பட்டதாரிகளாக தொழில்துறைக்குள் நுழையும் அன்றைய தினம் இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த தினமாக உள்ளது. அவர்களின் தரமான தொழில் பங்களிப்பு தொழில்துறையிலும் இறுதியில் நாட்டினதும் முன்னேற்றத்திற்கு காரணியாகிறது.

உயர்தர பரீட்சையின் பெறுபேறு அடிப்படையிலேயே உயர் கல்விக்காக இலங்கையின் அரச பல்கலைக்கழக கதவு மாணவர்களுக்கு திறக்கப்படுகிறது. இதன் வழி தகுதி பெறுகின்ற ஒரு தரப்புக்கு இலவசமாக உயர் கல்விக்கான கதவுகள் திறக்கப்படுகின்றபோதும் அதனை விடவும் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு அது கிடைப்பதில்லை. பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை மட்டுப்பட்டதாக இருப்பதும் வசதிகள் மட்டுப்பட்டதாக இருப்பதும் இதற்கு காரணமாகும். அரச பல்கலைக்கழகம் ஒன்றுக்கு நுழைவதற்கு முடியாமல்போனால் பணம் செலுத்தி தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் இலங்கையில் அல்லது வெளிநாடு சென்று உயர் கல்வியை பெற முடியும் என்றபோதும் அவ்வாறான வாய்ப்பு எல்லோருக்கும் ஒரே மாதிரியாகக் கிடைப்பதில்லை. அவர்கள் அனைத்து தொழில்துறைகளிலும் தேர்ச்சி பெற்ற தொழில்பயிற்சி வரையறைக்குள் தகுதியை பெற்ற தரப்பிடமும் அதற்கு அப்பால் அறிவுத் தேடலுக்காக பட்டப்படிப்பு தேவையை பூர்த்தி செய்யும் அவசியமும் உள்ளது. ஆனால் அவர்களுக்கான வாய்ப்பு ஏற்பட்டது மிக அண்மையிலாகும். வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் அவ்வாறான தேவை உள்ள இலங்கையின் இளைஞர்கள் இடையே பட்டப்படிப்பு கற்கைளை கற்கும் வாயிலை விரிவுபடுத்தி சாதகமான தீர்வை வழங்கிய அரச பல்கலைக்கழகமாகும்.

பல்கலைக்கழக நுழைவு வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கில் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைகளுக்காக இரு உள்நுழைவு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஓர் உள்நுழைவு வாய்ப்பாக தேசிய தொழில் தகைமை வரையறையின் ஐந்து அல்லது ஆறாவது மட்டத்தின் டிப்ளோமா தகைமை பெற்றவர்களுக்கான முதன்மை உள்நுழைவு. மற்ற உள்நுழைவு வழியானது உயர்தர பெறுபேறு அடிப்படையில் கல்விசார் முறையில் தேர்வு செய்வதாகும். பட்டப்படிப்பு கற்கைகளும் இரு வகைகளைக் கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளன. அதாவது வார நாட்கள் மற்றும் வார இறுதி கற்கைகள் என பிரிக்கப்பட்டுள்ளன. வார இறுதி கற்கைகள் சிலது



**எச்.ஏ. கயான் மதுஷங்க,**
விரிவுரையாளர்
சினிமா மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்ப கல்விப் பிரிவு
வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

தவிர்த்து பல கற்கைகளும் தேசிய தொழில் தகைமை வரையறைக்குள் வருகின்ற விண்ணப்பதாரர்களுக்காகவே திறக்கப்பட்டுள்ளது. இங்கு தொழிற்சாலையில் பணியாற்றும் எந்த வயது அல்லது நிலை அல்லது நபருக்கு உயர் கல்வி வாய்ப்பை பெறுவதற்கு முடியுமாகிறது. அதன் வழி உள்ளீர்ப்பை பெறுவதற்கு போட்டிப் பரீட்சை ஒன்றுக்கு முகம்கொடுத்து அதில் இருந்து பெற்றுக்கொள்ளும் புள்ளி அடிப்படையில் இடம்பெறும். இவ்வாறான பல்வகைமையைக் கொண்ட உள்நுழைவுகளை பெற்றுத்தரும் இலங்கையின் ஒரே அரச பல்கலைக்கழகமாக வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் உள்ளது.

1970ஆம் தசாப்தத்தின் பின் இலங்கை உயர் கல்வி முறை மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டது. அதன்படி தொழில் வாய்ப்பை எதிர்கொள்ளும் கற்கைகள் பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டன. வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் அனைத்து பட்டப்படிப்பு கற்கைகளும் தொழில்சார் கற்கைகளாகும். அதன்மூலம் ஏதேனும் தொழில்முறையை இலக்காகக் கொண்டு கல்விசார் நிர்ணயிக்கப்பட்ட கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவு வழங்கப்படும். அதன்மூலம் தொழில்துறைக்கு தேவையான பயிற்சி பட்டதாரிகள் உள்ளீர்க்கப்படுவதோடு அதனால் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்காக அதிக கேள்வி தொழில்துறையில் உள்ளது. அதுமட்டுமல்ல வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் நிறைவில் பல தொழில்முயற்சியாளர்கள் உருவெடுப்பது முக்கிய விடயமாகும். தமது வியாபாரம் ஒன்றை ஆரம்பித்து மேலும் பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கான திறனைக் கொண்ட பட்டதாரிகளை வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் உருவாக்குகிறது. பட்டப்படிப்பு கற்கை தொழில் வாய்ப்பை கொண்டிருப்பது மாத்திரம் அதிக கேள்வி உள்ள பட்டதாரி ஒருவர் உருவாகுவதற்கு போதுமானதல்ல. மேலும் பல விடயங்கள் உயர் தரத்தைக் கொண்ட பட்டதாரி ஒருவரை உருவாக்குவதற்கு காரணியாகிறது. தற்போதுள்ள பட்டப்படிப்பு கற்கைகள் தொழில்துறை பண்புகளுக்கு அமைய எப்போதும் புதுப்பிக்கப்பட வேண்டி இருக்கும் அதே நேரம் தொழில்துறையின் புதிய தேவைகளுக்கு பொருந்துகின்ற வகையில் புதிய கற்றல் கற்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் பல புதிய பட்டப்படிப்பு கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மொழிக் கல்விப் பிரிவின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கையாக மொழிபெயர்ப்பு கல்வி தொடர்பிலான பட்டப்படிப்பு கற்கை (Bachelor of Translation Studies) உள்ளது. அந்தக் கற்கைக்காக க.பொ.த உயர்தர பெறுபேறு அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும். பல்கலைக்கழகத்தில் புதிதாக நிறுவப்பட்ட சுற்றுலாக் கல்விப் பிரிவு (Department of Tourism Studies) மூலம் ஹோட்டல் முகாமைத்துவம் (Bachelor of Hotel Management) பட்டப்படிப்பு கற்கை ஒன்று நடத்தப்படுகிறது. அந்த பட்டப்படிப்பு கற்கைக்காக க.பொ.த. உயர்தர பெறுபேறு அடிப்படையில் வார நாட்களின் கற்கைக்கும் அந்தத் தொழில்துறையில் தற்போது பணி புரியும் குறித்த துறையில் NVQ 5 அல்லது 6 தகைமை கொண்ட மாணவர்களுக்காக வார இறுதி பட்டப்படிப்பு கற்கைக்கும் நுழைய முடியும்.

கற்கைகளுக்காக இருக்கும் கேள்வியை கருத்தில் கொண்டு தற்போது பட்டப்படிப்பு கற்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. சினிமா மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்ப கல்விப் பிரிவு இரு பட்டப்படிப்பு கற்கைகளை வழங்குகிறது. சினிமா மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்ப பட்டப்படிப்பு கற்கை (Bachelor of Technology in Film and Television Production Technology) மற்றும் ஊடகக் கலை தயாரிப்பு தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பு கற்கை (Bachelor of Technology in Media Arts Production Technology) அந்தக் கற்கைகளாகும். சினிமா மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்ப பட்டப்படிப்பு கற்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தொழில்துறைக்கு தேவையான நடைமுறை அறிவு உள்ள கல்வியாளர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. இது வார இறுதி பட்டப்படிப்பு கற்கை ஒன்றாகும். தொழில்துறை வேலையில் ஈடுபட்டுள்ள தொழில் தகைமையை பூர்த்தி செய்த மாணவர்களிடம் மாத்திரமே இதுவரை இந்தக் கற்கைக்காக மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டனர். இருக்கின்ற கேள்வியை கருத்தில் கொண்டு தற்போது க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறு அடிப்படையிலும் குறிப்பிட்ட வீதமான மாணவர்களுக்கு இந்த கற்கையில் வாயில் திறக்கப்பட்டுள்ளது. அந்தக் கல்விப் பிரிவு மூலம் நடத்தப்படுகின்ற மற்றைய பட்டப்படிப்பு கற்கைகளான ஊடகக் கலை தயாரிப்பு தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பு கற்கை (Bachelor of Technology in Media Arts Production Technology) வார நாட்களில் நடத்தப்படுகின்ற கற்கையாகும். இதற்காக இரு நுழைவுகள் மூலமம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவதோடு வார நாட்களில் இருக்கும் கற்கை என்பதால் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்திபெற்றவர்களே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இந்த பட்டப்படிப்பு படைப்புத்திறன் மற்றும் ஊடகத் தொழில்துறைகளில் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தொழில்துறையை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகிறது.

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைகள் அனைத்தும் உள்நாட்டு வெளிநாட்டு தரத்திற்கு அமைய நவீன பாடங்களைக் கொண்டுள்ளது. அவைகளின் மேம்படுத்தல்கள் தொழில்துறையின் வல்லுநர்கள் மற்றும் கல்விசார் அறிஞர்கள் ஆகிய இரு தரப்பினரின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டப்படிப்பு கற்கைகள் அனைத்திலும் கற்பித்தல் மற்றும் பதிப்பீடு ஆங்கில மொழியில் நடத்தப்படும். உலகம் வேகமாக முன்னேறிச் செல்கிறது. அந்த வேகத்திற்கு இணையாக பட்டப்படிப்பு கற்கைகளின் உள்ளடக்கம் மற்றும் கற்பித்தலை இற்றைப்படுத்துவது கல்விப் பணிக்குழுவினால் எப்போதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





பட்டப்படிப்பு கற்கைகள் இற்றைப்படுத்தப்படுவது மாத்திரம் போதுமானதல்ல. கற்பித்தல் முறைமை, முறையான வகையில் இடம்பெறாவிட்டால் பட்டப்படிப்பு கற்கை பாடங்கள் காகிதங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாக இருக்கும். வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழத்தில் கற்பித்தலானது மாணவர்களை மையப்படுத்திய கற்பித்தல் முறையாகும். அதற்காக துறைசார் வல்லுநர்களான ஆசிரியர் குழாம் ஒன்று பல்கலைக்கழகத்தின் வசம் உள்ளது. கற்பித்தல் செயற்பாடுகளில் எப்போதும் தொழில்துறையின் தொழில்முறையாளர்களின் வளப் பங்களிப்புக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதன் ஊடாக கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை அறிவின் சிறந்த கலவை ஒன்று கல்வி பெறுவோருக்கு கிடைக்கிறது.

தொழில்துறையின் தற்போதைய நிலையின் அறிவு மற்றும் தேவையான அறிவுசார் ஆய்வும் மிகவும் நடைமுறை ரீதியில் ஒவ்வொரு தொழில்துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வெளிநாட்டு தொழில்சார் வல்லுநர்களின் சிறப்பு விரிவுரை மற்றும் நடைமுறை செயலமர்வுகள் ஊடாக வழங்கப்படும்.

கல்வி பெறுவோரின் அறிவை மதிப்பிடும் முறைகளும் சம்பிரதாயமான பரீட்சை அமைப்பில் இருந்து அப்பாற்பட்டு இடம்பெறும். கோட்பாட்டு அறிவை மாத்திரம் கொண்ட தேர்ச்சி வளர்ச்சி பெறாத பட்டதாரிகளிடம் எப்போதும் தொழில்துறைக்கு நன்மை கிடைப்பதில்லை. அவர்களிடம் இருக்கும் அறிவு பல்லாண்டுகள் பழைய அறிவு என்றால் அதிலும் பயனில்லை. அவர்கள் வாய்ப்பாடம் செய்து கோட்பாடாக எழுதி பரீட்சையில் சித்தி பெறுவதாயின் அதிலும் கூட பயனில்லை. வேலையின்மை சிக்கலுக்கும் இது ஓரளவுக்கு காரணமாகிறது. வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பரீட்சை முறை சம்பிரதாய வரையறையில் இருந்து மாறுபட்ட முறையாகும். குறிப்பிட்ட கால எல்லையில் வினாத்தாளுக்கு பதில் அளிப்பது, நடைமுறை செயற்பாடுகள் ஊடாக பரீட்சையை நடத்துவது ஆகிய இரு முறைகளிலும் நடத்தப்படுவதோடு தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் நடைமுறை செயற்பாடுகளுக்கு அதிக ஈடுபாடு காண்பிக்கப்படுகிறது.

கல்வி பெறுவோரின் சுயாதீனமான அறிவுத் தேடலுக்கு தேவையான உச்ச சூழல் ஒன்று இரத்மலானை வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. எந்த நெரிசலும் இல்லாத உள்நாட்டு வெளிநாட்டு துறைசார் நிபுணர்கள் மற்றும் அறிஞர்களுடன் இடம்பெறுகின்ற விரிவுரைகளுக்கான வசதிகள் போன்று அதி நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட ஆய்வுகூடம், கணினி ஆய்வுகூடம் மற்றும் வேறு அத்தியாவசிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதாக பல்கலைக்கழகத்தின் உட்புற வசதிகள் உள்ளன.

பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையில் பல்வேறு தொழில்முயற்சியாளர்கள் இடையே ஏற்படுத்தப்பட்ட இரு தரப்பு உடன்படிக்கை அடிப்படையில் கல்வி பெறுவோருக்கு தேவையான துறைசார் அறிவு மற்றும் நடைமுறை பயிற்சிக்கு தேவைப்படும் நுழைவுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

குறுகிய எதிர்காலத்திலேயே ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கும் புடவை தொழில்நுட்பம் தொடர்பிலான கல்விப் பிரிவு அவ்வாறான இரு தரப்பு உடன்படிக்கை ஒன்றின் சிறந்த பலனாகும். மாணவர்களின் நுழைவை விரிவுபடுத்தும் நோக்கில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனங்களுடன் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் இரு தரப்பு உடன்படிக்கைகள் சார்ந்த கொள்கைகள் தற்போது தயாரித்து முடிக்கப்பட்டிருப்பதோடு குறுகிய எதிர்காலத்தில் மூன்றாவது நுழைவு ஒன்றும் மாணவர்களுக்கு திறக்கப்படும்.

இந்தப் பின்னணியில் 2022 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் பட்டத்தை பெற்று புதிய உலகுக்கு இலட்சியத்துடன் உறுதியாக கால் பதிக்கும் பட்டதாரிகளான நடைமுறைசார்ந்த இளம் கல்வியாளர்களுக்கு நாம் இங்கு உண்மையான ஆடம்பரத்துடன் மனப்பூர்வமான பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களில் பலரும் தற்போது தொழில் பெற்றவர்களாக உள்ளனர். ஏனையோரும் தொழில்துறையின் கேள்வியை கவரக்கூடிய அளவில் பெறுமதி பெற்ற மனித வளமாக உள்ளனர்.

எனவே உங்களுக்கும் எதிர்காலத்தை வெல்வதற்கு, வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் கேட்டறிந்துகொள்வதற்கு அழைக்கிறோம்.




ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

இலங்கை மின்சார சபையானது நடுத்தர மின்னழுத்த விநியோக முறைமை மற்றும் குறைந்த மின்னழுத்த ஊட்டிகளின் நிர்மாணம், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. எனவே, 2022 ஏப்ரல் மாதத்தில் தெரிவு செய்யப்பட்ட பின்வரும் C.S.C / மாகாணங்கள் / பிரதேசங்களில் பின்வருமாறு பட்டியலிடப்பட்ட திகதிகளில் மின்சார விநியோகம் தடைபடும். திட்டமிடப்பட்ட மின் விநியோகத் தடைகளினால் மேற்படி இடங்களில் உள்ள நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு இலங்கை மின்சார சபை வருத்தத்தைத் தெரிவிக்கின்றது என்பதுடன் மின் விநியோகத் தடை முடிவடைந்தவுடன் மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவர சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மின் விநியோகத் தடை அறிவித்தல் - ஏப்ரல் 2022**

| திகதி | நேரம் |
|---|---|
| **மேல் மாகாண தெற்கு 1** | |
| **மின் பொறியியலாளர் பிரதேசம் : தெஹிவளை** | |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : களுபோவிலை** | |
| 2022-04-20 | 08:30 - 17:00 |
| 2022-04-25 | 08:30 - 17:00 |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம்: கல்கிசை** | |
| 2022-04-25 | 08:30 - 17:00 |
| **மின் பொறியியலாளர் பிரதேசம் : களுத்துறை** | |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : பேருவளை** | |
| 2022-04-25 | 08:30 - 17:00 |
| 2022-04-28 | 08:30 - 17:00 |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம்: Fullerton** | |
| 2022-04-26 | 08:30 - 17:00 |
| 2022-04-29 | 08:30 - 17:00 |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : பாணந்துறை** | |
| 2022-04-21 | 08:30 - 17:00 |
| 2022-04-22 | 08:30 - 17:00 |
| 2022-04-28 | 08:30 - 17:00 |
| **மின் பொறியியலாளர் பிரதேசம் : மத்துகமை** | |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : அகலவத்தை** | |
| 2022-04-20 | 08:30 - 17:00 |
| 2022-04-21 | 08:30 - 17:00 |
| 2022-04-22 | 08:30 - 17:00 |
| 2022-04-27 | 08:30 - 17:00 |
| 2022-04-29 | 08:30 - 17:00 |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : மீககத்தேனை** | |
| 2022-04-25 | 08:30 - 17:00 |
| 2022-04-26 | 08:30 - 17:00 |
| 2022-04-28 | 08:30 - 17:00 |
| **மின் பொறியியலாளர் பிரதேசம் : இரத்மலானை** | |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : பொரலஸ்கமுவ** | |
| 2022-04-23 | 08:00 - 17:00 |
| 2022-04-28 | 08:30 - 13:30 |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : கெஸ்பாவை** | |
| 2022-04-21 | 08:30 - 17:00 |
| 2022-04-24 | 08:30 - 17:00 |
| 2022-04-26 | 08:30 - 17:00 |
| 2022-04-27 | 08:30 - 17:00 |
| **வாடிக்கையாளர் சேவை நிலையம் : இரத்மலானை** | |
| 2022-04-20 | 08:30 - 17:00 |
| **தென் மாகாணம் - 1** | |
| **அக்குரஸ்ஸ மின் பொறியியலாளர் பிரதேசம்** | |
| **அக்குரஸ்ஸ** | |
| 2022-04-22 | 08.00 - 17.00 |
| 2022-04-23 | 08.00 - 17.00 |
| **தெனியாய** | |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-27 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **மொரவாக்க** | |
| 2022-04-20 | 08.00 - 17.00 |
| 2022-04-21 | 08.00 - 17.00 |
| **பஸ்கோடா** | |
| 2022-04-28 | 08.00 - 17.00 |
| **வெலிகம** | |
| 2022-04-23 | 08.00 - 17.00 |
| 2022-04-24 | 08.00 - 17.00 |
| 2022-04-25 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **அம்பலாங்கொடை மின் பொறியியலாளர் பிரதேசம்** | |
| **எல்பிட்டிய** | |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-28 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **இந்துருவா** | |
| 2022-04-20 | 08.00 - 17.00 |
| 2022-04-21 | 08.00 - 17.00 |
| 2022-04-22 | 08.00 - 17.00 |
| 2022-04-23 | 08.00 - 17.00 |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-27 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **சீனிகொட** | |
| 2022-04-20 | 08.00 - 17.00 |
| 2022-04-20 | 08.00 - 17.00 |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **கோணாபினுவல** | |
| 2022-04-23 | 08.00 - 17.00 |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-21 | 08.00 - 17.00 |
| 2022-04-25 | 08.00 - 17.00 |
| 2022-04-28 | 08.00 - 17.00 |
| **உடுகம** | |
| 2022-04-27 | 08.00 - 17.00 |
| **வதுரம்பா** | |
| 2022-04-20 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **காலி மின் பொறியியலாளர் பிரதேசம்** | |
| **படதுவா** | |
| 2022-04-20 | 08.00 - 17.00 |
| 2022-04-21 | 08.00 - 17.00 |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **காலி** | |
| 2022-04-21 | 08.00 - 17.00 |
| 2022-04-22 | 08.00 - 17.00 |
| 2022-04-28 | 08.00 - 17.00 |
| **ஹபராதுவ** | |
| 2022-04-22 | 08.00 - 17.00 |
| 2022-04-23 | 08.00 - 17.00 |
| 2022-04-24 | 08.00 - 17.00 |
| 2022-04-28 | 08.00 - 17.00 |
| 2022-04-29 | 08.00 - 17.00 |
| **தவலம** | |
| 2022-04-23 | 08.00 - 17.00 |
| 2022-04-25 | 08.00 - 17.00 |
| 2022-04-26 | 08.00 - 17.00 |
| 2022-04-27 | 08.00 - 17.00 |
| 2022-04-28 | 08.00 - 17.00 |

மேலதிக விபரங்களுக்கு எமது உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.ceb.lk) CEB Care செயலியைப் பார்க்கவும். அல்லது தரப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும். மின் விநியோகம் துண்டிக்கப்படும் திகதி மற்றும் நேரம் குறித்த பாதிக்கப்படும் நுகர்வோருக்கு தனிப்பட்ட முறையில் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறியத்தரப்படும்.

பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, இல. 50, சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.

வளமான வாழ்விற்கு மின்சாரம்

நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணைங்களை www.ceb.lk எனும் இணையதளத்தில் செலுத்தலாம்.





வாங்கிவிட்டீர்களா?
வண்ண வானவில்
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
நாடெங்கும் பரபரப்பான விற்பனையில்!
50 ரூபாய் மட்டுமே
ஏப்ரல் மாத இதழ்

நெற்றித் திலகம் போல இது குடும்பத்துக்கான ஒரு முழுமையான பத்திரிகை

இலக்கியம், சிறுகதை, விளையாட்டு, சினமா, கவிதை, சிறுவர் பகுதி, எஸ்.எம்.எஸ் ஜோக்ஸ், நட்சத்திர அல்பம் என வாசிப்புக்கு ஏகப்பட்ட விஷயங்கள்!

ஏனைய பத்திரிகைகள் தயங்கும் இடங்களில் நெஞ்சு நிமிர்த்தும் துணிச்சல்...

LAKE HOUSE

பக்கத்துக்குப் பக்கம் இனிமை, இளமை, செழுமை

தனித்துவம் அது வானவில் முத்திரை!

# மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து கவலை அடைகிறோம்

## விளையாட்டுத்துறை அமைச்சர் தேனுக்க

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து கவலை தெரிவிப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தேனுக்க விதானகமகே தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

இந்த நிலைமைக்கு அனைத்து அரசுகளும் பொறுப்பு கூற வேண்டும். நம்பிக்கையில்லா பிரேரணைக்கு கையெழுத்திடாவிட்டால் ஊருக்கு செல்ல முடியாது என்றார்கள். மக்களுக்கு அநீதி ஏற்பட இடமளிக்க மாட்டோம். ஏற்பட்டுள்ள நிலை குறித்து கவலை அடைகிறோம். மக்களிடம் கவலை தெரிவிக்கிறோம். இந்த அரசுபற்றி விமர்சனம் தெரிவித்தாலும் சகலரும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் கடன் பெறப்பட்டது போன்று அபிவிருத்தியும் நடந்தது. அவரது காலத்தை விட கட்நத ஆட்சியில் அதிக கடன் பெறப்பட்டது. இந்த பொறுப்பில் இருந்து யாருக்கும் தப்ப முடியாது. எதிரணி சபையில் நடந்து கொண்ட விதத்தை முழுநாடும் கண்டது என்றார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க தெரிவித்தார். கொவிட் தொற்று வந்த போது நாட்டை மூடி கட்டுப்படுத்த முயன்றார்கள். உலக சுகாதார ஸ்தாபன தரவுபடி உலகில் 2 ஆம் இடத்திற்கு எமது நாடு முன்னேறியது. ஜே.ஆரை விலகுமாறு கோரினார்கள். அவரை கொல்ல வேண்டும் என்றார்கள். வேட்பு மனு த் தாக்கல் செய்தால் கொல்வதாக தெரிவித்தார்கள். பிரேமதாஸவை கொல்வதாக தெரிவித்தார்கள். அவர் தேர்தலில் வென்றார். நடப்பதை கோட்டாபய ராஜபக்ஷ பார்த்துக்கொண்டிருக்கிறார்.இரசாயன பசளை நிறுத்தியது தவறு என ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

# தவறை ஏற்குமளவுக்கு ஜனாதிபதிக்கு முதுகெலும்பு உண்டு

தாம் தவறு செய்தமையை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு ஜனாதிபதிக்கு முதுகெலும்பு இருப்பதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

இரசாயன பசளை இறக்குமதிகளை ரத்துச்செய்தமை தொடர்பில் ஜனாதிபதி மன்னிப்பு கோரியமை தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மத்திய வங்கி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக மன்னிப்பை கோர முன்னைய அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இருக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.இதன் போது விவசாயிகளுக்கு நட்டஈடுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிடுள்ளார். நாட்டில் இன்று ஏற்பட்ட நிலைமையை 225 பேரும் இணைந்தே தீர்க்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனுக்கு பாபு சர்மா ஆசிகள்





தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதியினால் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டமை குறித்து சர்வதேச இந்துமத பீட செயலாளர் கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா வாழ்த்துக்களுடன் ஆசிகளையும் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி அந்தப் பகுதி மக்களின் பெரும் வரவேற்பை பெற்று பாராளுமன்றத்தேர்தலில் சிறையிலிருந்தவாரே பெருமளவிலான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் . அந்த அளவுக்கு மக்களிடம் நன்மதிப்பை பெற்று தனது சேவைகள் மூலமாக மக்களை கவர்ந்து வைத்துள்ளார் எனவும் பாபு சர்மா குருக்கள் தனது பாராட்டு தெரிவித்துள்ளார்




## 19வது விளையாட்டு அமைச்சர் தேனுக விதானகமகே



இலங்கையின் 19வது விளையாட்டுத்துறை அமைச்சராக தேனுக விதானகமகே நேற்று முன்தினம் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சராக அனுபவம் பெற்ற அவர், நாடு முழுவதிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சகல வசதிகளுடன் கூடிய மைதானங்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கண்டி திரித்துவக் கல்லூரியின் பட்டதாரி மாணவரான விதானகமகே ரக்பி, கூடைப் பந்தாட்டம், நீச்சல் ஆகிய மூன்று விளையாட்டுகளிலும் பங்களித்து திறமையான வீரர் ஆவார்.

49 வயதான தேனுக விதானகமகே கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று பதுளை மாவட்டத்தில் மூன்றாவது இடத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

# ஜூனியர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் மே 9-12 வரை கொழும்பில்





இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியை மே 9 முதல் 12 வரை கொழும்பு சுகததாச மைதானத்தில் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

16, 18, 20 மற்றும் 23 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் இந்த நான்கு நாள் நிகழ்வில் நடத்தப்படும்.

அனுமதிகள் மே 3 ஆம் திகதி முடிவடையும் மற்றும் பாலித ஜெயதிலக்க, போட்டி குழு, இலங்கை மெய்வல்லுநர் சங்கம், எண் 33, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் உதவி தலைவர் பெரேரா, கடந்த இரண்டு ஆண்டுகளில் 2020 மற்றும் 2021 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக இந்த நிகழ்வை நடத்த முடியவில்லை. இளைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது மீண்டும் ஒரு நல்ல வாய்ப்பு.

கடந்த 2019ம் ஆண்டு 23 வயதுக்குட்பட்டோர் இல்லாமல் இந்த போட்டி நடைபெற்றது. எவ்வாறாயினும், கடந்த இரண்டு வருடங்களில் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் போட்டியிடத் தவறிய விளையாட்டு வீரர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக இலங்கை மெய்வல்லுநர் சங்கம் இம்முறை 23 வயதுக்குட்பட்ட பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் 20 வயதிற்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் ஜூனியர் பிரிவில் பங்கேற்பதற்கான இறுதி வாய்ப்பைப் பெறாததால், இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் இது நல்ல முடிவு.

உலக ஜூனியர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் ஓகஸ்ட் 1 முதல் 6 வரை கொலம்பியாவின் கலியில் நடைபெறவுள்ளது மற்றும் இலங்கை ஜூனியர் விளையாட்டு வீரர்கள் சமீபத்தில் தேர்வு சோதனைகளை நடத்தி இந்த முக்கிய நிகழ்விற்கு ஏற்கனவே தேர்வு செய்துள்ளனர், ஆனால் இந்த ஜூனியர் மெய்வல்லுநர் சாம்பியன்ஷிப் இளம் வீரர்களுக்கு தமது திறமையை வெளிக்காட்ட ஒரு நல்ல வாய்ப்பாகும்.


44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 23-04-2022 இல. 04





## பாடசாலை மட்ட உதைபந்தாட்ட தர வரிசையில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னிலை



**பேருவளை விசேட நிருபர்**

கொழும்பு குதிரை பந்தய திடல் சர்வதேச மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி ஒக்ஸ்போட் கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. தொடரின் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் அஹமட் நிபால் பெற்றுக்கொண்டார். இந்த சர்வதேச மைதானத்தில் அஹமட் நிபால் தனதாக்கிக் கொண்ட இரண்டாவது சிறந்த கோல் காப்பாளருக்கான விருது இது என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை பாடசாலை மட்ட கால்பந்தாட்ட வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியை (தேசிய பாடசாலை) கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உட்பட கல்லூரியின் ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## கிம் கிளிஸ்டர்ஸ் ஆறு முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் மூன்றாவது முறையாக ஓய்வு



முன்னாள் உலகின் நம்பர் 1 கிம் கிளிஸ்டர்ஸ் கடந்த ஆண்டு அக்டோபரில் இருந்து ஒரு போட்டியில் விளையாடாத பின்னர் மூன்றாவது முறையாக டென்னிஸில் இருந்து விலகி மூன்றாவது முறையாக விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

ஆறு முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியனான அவர் 2007 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார், ஏனென்றால் அவர் குழந்தைகளைப் பெற்று ஒரு குடும்பத்தைத் தொடங்க விரும்பினார். ஆனால் அவர் 2009 இல் திரும்பி வந்தார், மேலும் 2012 இல் மீண்டும் விளையாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பு தனது பெல்ட்டின் கீழ் மூன்று கிராண்ட்ஸ்லாம்களைப் பெற்றார்.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 2019 ஆம் ஆண்டில் பெல்ஜியம் மீண்டும் திரும்பியது, ஆனால் அவர் ஐந்து போட்டிகளில் மட்டுமே விளையாட முடிந்தது, கடைசியாக கடந்த ஆண்டு இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸில் இருந்தார். அங்கு அவர் முதல் சுற்றில் கத்தரீனா சினியகோவாவால் தோற்கடிக்கப்பட்டார். இப்போது அவர் 38 வயதானபோது டென்னிஸை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளார்.

சர்வதேச டென்னிஸ் ஹால் ஆஃப் ஃபேம் உறுப்பினர் இப்போது தனது கணவர், ஓய்வுபெற்ற தொழில்முறை கூடைப்பந்து வீரரான பிரையன் லிஞ்ச் மற்றும் அவர்களின் சொந்த ஊரான நியூ ஜெர்சியில் அவர்களின் மூன்று குழந்தைகளுடன் செலவிட தனது கைகளில் அதிக நேரம் இருக்கும் என அவர் தெரிவித்தார்.

## மண்முனைப்பற்றின் 2022 ஆம் ஆண்டிற்கான பிரதேச மட்ட விளையாட்டு விழா கோலாகலமாக ஆரம்பம்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



மண்முனைப்பற்று பிரதேச செயலகமும், கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களமும் இணைந்து நடாத்திய மண்முனைப்பற்றின் 2022 ஆம் ஆண்டிற்கான பிரதேச மட்ட விளையாட்டு விழா கோலாகலமாக இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட விளையாட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜனி முகுந்தன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்பரன் மண்முனைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி த.பிரபாசங்கர் மற்றும் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.ஏ.ஆதாம்லெவ்வை ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இவ் பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டியில்

மரதன் ஓட்டம்,கயிறு இழுத்தல் உட்பட சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றது.

குறித்த விளையாட்டு விழாவில் புள்ளிகளின் அடிப்படையில் சுடர் விளையாட்டு கழகம் 14 தங்கப்பதக்கங்களையும், 9 வெள்ளிப்பதக்கங்களையும், 8 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாம் இடத்தினையும், விஸ்வகலா விளையாட்டுக்கழகம் 12 தங்கப்பதக்கங்களையும் 7 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று இரண்டாம் இடத்தினையும், 6 தங்கப்பதக்கங்களையும் 10 வெள்ளிப்பதக்கங்களையும் 12 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று டெல்பின் விளையாட்டு கழகம் மூன்றாம் இடத்தினையும் சுவீகரித்திருந்தது.

இதன்போது அலுவலக உத்தியோகத்தர்களுக்கான போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன்,

மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆண் மற்றும் பெண் வீரர்களுக்கான சிறப்பு விருதுகளும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி.வி.லோகினி, பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் திவாகரன், விளையாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச விளையாட்டு கழகங்களின் வீரர்கள் அடங்கலாக கிராம மக்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 20ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு**
**250 மெ.தொ. உள்ளூரில் வளர்க்கப்பட்டு வழங்கப்படும்**
**சோயாவிற்கான பெறுகை**

**Bid No. SLTL/TB/04/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு உள்ளூரில் வளர்க்கப்பட்டு வழங்கப்படும் 250 மெ.தொ. சோயாவை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (உயர் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011 2236 588/ 011 2237 418.
5. 2022.05.09 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 13,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.05.10 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அதாவது 2022.05.10 ஆம் திகதியிலிருந்து 2022.08.09 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 843,750.00 ரூபா பெறுமதியானதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து அதாவது 2022.05.10 ஆம் திகதியிலிருந்து 2022.09.06 ஆம் திகதி வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் (2022.05.10 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு).

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:**
**தலைவர்,**
**உயர் மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17,**
**கப்புவத்த, ஜா-எல.**

# அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2021 மார்ச் 08 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு 2022 ஏப்பிரல் 26 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2022 மே 07 – மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்** இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை. **நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்** இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.

சிரேஷ்ட உப தலைவர் / பிரதம செயற்பாட்டு அதிகாரி
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk
ICRA லங்கா ரேட்டிங் [SL] AA- (ஸ்திரம்), ஃபிச் ரேட்டிங் A+ (lka) ஸ்திரமான தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## உள்ளூராட்சித் திணைக்களம் — கிழக்கு மாகாணம்


**2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நாகராசா மணிவண்ணன் ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தின் 66(எ) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 66(இ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் நகர சபையில் வெற்றிடமாகியுள்ள துணைத் தவிசாளர் பதவிக்கு புதிய துணைத் தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டமானது 2022.04.28 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு ஏறாவூர் நகர சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக்கூட்டங்கள் தொடர்பான அறிவித்தல் என்னால் 2276/02 ஆம் இலக்க 2022.04.18 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையில் (அதி விசேடம்) விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**நா.மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

Repeat Your Ad For Better Offers

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கொழும்பு மாநகர சபை

**கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.09.17ஆம் திகதிய 2245/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது.**

*(1952ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தரப்படுத்தப்பட்ட துணை விதிச் சட்டம்) 1989.01.20ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி 541/17ஆம் இலக்க துணை விதிச் சட்டத்தின்*

**Vஆம் பாகத்தின் பிரகாரமான கேள்வி அறிவித்தல்**

## விலைக்கோரல் / கேள்விகளுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர் / கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ML/25/2022 | கொழும்பு-15, மட்டக்குளியவிலுள்ள பல்பணி (Multitasking) கட்டிடத்திற்கு தனிச்சிறப்பு சின்னத்தை (Plaque) வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 5,400.00 | விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | சித்திகரமான விலைமனுதாரருக்கு இதனையொத்த வேலைகளில் 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 2 | ME/ME/ML/40/2022 | கொழும்பு-06, வெள்ளவத்தை மெனிங் பிளேஸிலுள்ள மகப்பேறு மற்றும் சிறுவர் சிகிச்சைக் கட்டிடத்திற்கு தனிச்சிறப்பு சின்னத்தை (Plaque) வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 5,400.00 | விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | சித்திகரமான விலைமனுதாரருக்கு இதனையொத்த வேலைகளில் 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 3 | ME/ME/ML/41/2022 | கொழும்பு-06, வெள்ளவத்தை மெனிங் பிளேஸிலுள்ள ஆயுர்வேத மருந்தகத்திற்கு தனிச்சிறப்பு சின்னத்தை (Plaque) வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 5,400.00 | விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | சித்திகரமான விலைமனுதாரருக்கு இதனையொத்த வேலைகளில் 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 4 | ME/ME/ML/42/2022 | கொழும்பு-06, வெள்ளவத்தை மெனிங் பிளேஸிலுள்ள 05ஆம் வட்டார அலுவலகக் கட்டிடத்திற்கு தனிச்சிறப்பு சின்னத்தை (Plaque) வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 5,400.00 | விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | சித்திகரமான விலைமனுதாரருக்கு இதனையொத்த வேலைகளில் 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 5 | ME/ME/ML/43/2022 | வனாத்தமுல்லையிலுள்ள மேற்கு மருந்தகம் மற்றும் கண் சிகிச்சையகத்திற்கு தனிச்சிறப்பு சின்னத்தை (Plaque) வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 5,400.00 | விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | சித்திகரமான விலைமனுதாரருக்கு இதனையொத்த வேலைகளில் 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். |

**விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➤ **வட்டார அலுவலகம் 04,**
இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
கொழும்பு 06.

➤ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-05-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2) விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022-05-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

